# Chanchive சஞ்சிகை

மலர் 34




Sara Balakrishnan fik overrakt præmien af statsminister Poul Nyrup Rasmussen. Til venstre Henrik Sass Larsen, DSU, og til højre Det Fri Aktuelts chefredaktør Lisbeth Knudsen. Foto: Christopher Regild

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1996

மலர் : 34

பக்கம்: உள்ளடக்கம்:


| | |
|---|---|
| 3. | நோக்கு |
| 5. | கட்டுரை - எதிர்காலத்தில் ஜனநாயகம். |
| 9. | கட்டுரை - பெண்கள். |
| 11. | கடிதம். |
| 16. | கவிதை - இறும்பூதல். |
| 17. | ஒரு சந்திப்பு. |
| 24. | மொழி பெயர்ப்புச் சிறுகதை - மர்ம மனிதன். |
| 26. | கவிதை - ஒரு வசன கவிதையைப் போல். |
| 30. | கட்டுரை - கற்பு பெண்களுக்கு மட்டுந்தானா? |
| 35. | குர்டிஸ்தான் விடுதலையும் கவிதை-. தொ.இ:3 |
| 37. | சிறுகதை - ஒளியிடைமறைவில். |
| 42. | கட்டுரை - பாசிச எதிர்ப்புத் திரைப்படங்கள். |
| 50. | கவிதை - விளைவுகள். |


அட்டைப்படம்: DET FRI AKTUELT ( 13 . April . 1996 )


சஞ்சீவியுடனான அனைத்து தொடர்புகளுக்கும் :

CHANCHIVE
DANMARKSGADE 10
7500 HOLSTEBRO
DENMARK.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

டென்மார்க்கிற்கு தமிழர்கள் புலம் பெயர்ந்து ஏறக்குறைய 12, 13 வருடங்களாகிவிட்டன. இக்காலகட்டத்தில் வந்தவர்களில் பலரது குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி இன்று உயர்கல்வி கற்கும் அல்லது வேலை தேடும் நிலையை அடைந்துள்ளார்கள். இப்படியொரு நிலைப்பாட்டிற்கு காலம் யாவரையும் நகர்த்தி வந்துள்ளதெனலாம். இந்த நவீன கால ஓட்டத்துடன் நாமும் சேர்ந்து முன்னேற வேண்டிய தேவை எமக்கு பெரிதுமுள்ளது.

இன்று ஈழத்தினை விட்டுப் புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்து வரும் எங்கள் சமூகக் கிளைகளின் நிகழ்காலம் பற்றி யாவரும் நிறையவே சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இலங்கையின் அடிப்படைக் கல்வி முறை, சமூக அபிவிருத்தியில் இந்த வெளியுலகுடன் ஒப்பிடும் போது பல வகையான குறைநிரப்பலுக்கான மாற்றங்களுக்கான வெற்றிடங்கள் புலவு பற்றிப் போயிருக்கின்றன. ஈழத்தின் போர்ச் சூழலால் இன்னும் இது இறுக்கமடைந்து யாவும் தரிசு நிலம் போல் காணக் கிடக்கின்றது. ஆயினும் நாமின்று வாழ்ந்து வரும் புலம் பெயர் நாடுகளில் கற்று அறிந்து கொள்ள வேண்டிய துறைகள் பலவுள்ளன. இதில் வளர்ந்தவர்களை விட எமது குழந்தைகளுக்கு தான் நிறையவே சந்தர்ப்பங்களுள்ளன. பிள்ளைகள் என்ன துறையில் ஆர்வமாயும், விருப்பமாயும் இருக்கின்றார்களோ அந்தத் துறையில் அவர்களை மேலும் ஊக்கிவிப்பதே மிகவும் பயன் தரும். மறாக சில பெற்றோர்கள் தாம் விரும்பிய துறையில் தாங்கள் முன்னுக்கு வர முடியாது போன காரணத்தினால் பிள்ளைகளை அந்தத் துறையில் (வைத்தியர், பொறியியலாளர்.....) வளர்த்தெடுக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள். சில பெற்றோர் பிள்ளைகளை வற்புறுத்துவதுமுண்டு. இது எந்தளவிற்குப் பயன் தரும் என்பது கேள்விக் குறியானதே. இப்படியானதொரு சூழலில் பிள்ளைகள் எந்தத்

www.tamilarangam.net

துறையிலும் முன் னேற்றமடைய முடியாது போன சம்பவங்கள் பல குடும்பங்களில் நிகழ்ந்துள்ளன.

இன்னும் சில பெற்றோர்கள் ஏதாவது ஒரு துறையில் படித்தால் போதும் என்று நினைக்கின்றார்களே தவிர பிள்ளைகள் என்ன படிக்கிறார்கள், அவர்களை எப்படி ஊக்கிவிப்பது, தாங்கள் எந்த வகையில் அவர்களுக்கு உதவ முடியுமென்ற வழிவகைகள் தெரியாமல் இருக்கின்றார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் பாடசாலைகளில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களில் கலந்து கொள்வதோடு பிள்ளைகளின் கல்வி சம்பந்தமான பிரச்சனைகளை, சந்தேகங்களை ஆசிரியாகளிடம் மனம் விட்டு பேசுவதன் மூலமும் பிள்ளைகளின் பலவீனங்களை, குறைபாடுகளை தெரிந்து கொண்டு உதவ முடியும்.

ஒரு சில பெற்றோர்கள் நாங்கள் வெளிநாட்டவர்கள், இங்கு படித்து எதுவும் செய்ய முடியாது என நினைத்து இடையிலேயே பிள்ளைகளை வேலைக்கு அனுப்பி விடுகின்றார்கள். இனத்துவேஷமோ, தடைகளோ இங்கு இல்லை என்று யாரும் கூற முடியாது. ஆனால் திறமைக்கும், முயற்சிக்கும் நிறையவே வாய்ப்புக்கள் உள்ளன. எந்த அநீதிகளையும், சட்ட விரோதமான செயற்பாடுகளையும் எதிர்த்து வாதிட வெளியுலகிற்கு கொண்டு வர சட்டமும், தொடர்புச் சாதனங்களும் பல வழிகளில் உதவுகின்றன. சில பெற்றோர் விரும்புவது போல் எம் குழந்தைகள் டாக்ரர் ஆக அல்லது எஞ்ஜினியராகத் தான் வர வேண்டும் என்ற எமது தமிழ்ச் சிந்தனையினை மறந்து இந்த நாட்டில் கற்றுக் கொள்ளக் கூடிய சமூகவியல் சார்ந்த பல துறைகள், நவீன தொழில் நுட்பக் கல்விகள்... போன்ற இன்னும் எத்தனையோ துறைகளுள்ளன. நமது பிள்ளைகளை இப்படியொரு நிலைக்கு வளர்த்தெடுப்பதன் மூலம் அவர்கள் பயனடைவது மட்டுமல்லாது, என்றுமே எமது தாய் நாட்டில் பற்றாக் குறையாகவும், இடைவெளியாகவும் இருக்கும் பல இடங்களை இந்த புலம் பெயர் நாடுகளில் வளரும் எமது குழந்தைகளாவது நிரப்புவார்கள்.

-சஞ்சீவி.

---

1996ம் ஆண்டு சித்திரை மாதம் 13ம் திகதி டென்மார்க்கில், ஈக்காஸ்ற் ஐச் சேர்ந்த திரு திருமதி பாலகிருஷ்ணனின் மகள் சாரதா பாலகிருஷ்ணன் **Det Fri aktuelt** என்ற நாளேட்டினால் நடாத்தப்பட்ட "எதிர்காலத்தில் ஜனநாயகம்" என்ற இளைஞர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதலாவது பரிசுக்கான 25.000 **kr** பெறுமதியான காசோலையைப் பிரதமர்**Poul Nyrup Rasmussen** இடமிருந்து பெற்றுக் கொண்டார். சாரதா பாலகிருஷ்ணன் தனது பெற்றோருடன் கடந்த எட்டு வருடங்களாக டென்மார்க்கில் வசித்து வருகின்றார். இவருக்கு இப்போது 19 வயது. இவர் சமூக ஆலோசகற்கான கல்வியின் முதலாம் ஆண்டு மாணவியாவார். பிரதமர் **Poul Nyrup Rasmussen** அவர்கள் சாரதாவிற்கு பரிசினை அளித்த போது,"" ஜனநாயகம் தானாகத் தொடர்வதல்ல அது பாதுகாக்கப்படவும் பராமரிக்கப்படவும் வேண்டும். அத்துடன் நாங்கள் எமது பங்களிப்பினையும் அக்கறையினையும் கொண்டிருக்க வேண்டும் என்றவொரு ஆணித்தரமான நல்ல கருத்தினையும் அளித்துள்ளீர்கள்."" என்று குறிப்பிட்டுள்ளார்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்காலத்தில் ஜனநாயகம்...

*தமிழில் திருமதி: வாஸந்தி கமலநாதன்.*

"ஜனநாயகம்" என்பது ஒரு நவநாகரிகச் சொல்லாக மாறிவிட்டது. எமது சமுதாயத்தில் ஜனநாயகம் என்ற சொல் தீர்மானமெடுக்கப்படுபவர்களாலும் தொலை தொடர்புச் சாதனங்களினாலும் அடிக்கடி பாவிக்கப்படுகின்றது.

ஒரு செயற்பாடு ஜனநாயகத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் போது எந்த நடைமுறைப்படுத்தலுக்கு எதிராக எவரும் முறையீடு செய்ய முடி யாது. எடுக்கப்பட்ட முடிவுகளில் அனைவரும் திருப்த்தியடைவர் என இங்கே பொருள் விளங்கலாகாது. அப்படியிருந்தும் நாம் எமது நாட்டின் ஜனநாயக முறையைப்பற்றி பெருமைப்படுவதுடன் பாராளுமன்றத் தேர்தலில் அதிக வீத மக்கள் வாக்களிப்பதையிட்டு மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

ஜனநாயகத்திற்கும் தனது பலவீனங்கள் உண்டு. இவை பற்றி நாம் பெரிதாகவே அறியப் பெறுகின்றோம். ஜனநாயகம் மக்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கின்றது. ஆனால் மக்கள் என்போர் உணர்ச்சிக்களுள்ள ஒரு கூட்டமான மனிதர்களே. இந்த மக்களின் உணர்ச்சிகளுடன் விளையாடுவதன் மூலம் ஒரு கருத்தின் காரண காரியங்களை விளங்கிக் கொள்ளாமலேயே கருத வைக்க முடியும். உதாரணம், மக்களின் உணர்ச்சிகளுடனும் விளை யாடுவதன் மூலமும் ஜனநாயக நடைமுறையைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்துவதன் மூலமும் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தார். ஜனநாயகம் சரியாக நடைமுறைப்படுத்தப்படும் நாடாக இருந்தாலும் அங்கும் ஒரு அவநம்பிக் கையிருக்கும்.

பெரும்பான்மை மக்களால் எடுக்கப்படும் முடிவும் சில வேளைகளில் பிழையானதாக இருப்பதுடன் அப்பிழையானது மீண்டும் திருத்தி அமைக்க முடியாததாகவும் அமைந்து விடுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலின் கூடியவீதமான வாக்களிப்பினைக் கண்டு நாம் பெருமையடைந்தாலும் பெரும்பாலான வாக்களிப்போர் தெரிவு செய்யும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல்வாதிக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி அக்கறைப்படுவதில்லை.

எதிர்காலத்தில் ஜனநாயகத்தின் எல்லை எவ்வளவுக்கெவ்வளவு விரிவடைகின்றதோ அவ்வளவிற்கு நாம் எம்மை ஈடுபடுத்திக் கொள்ளப் போகின்றோம் என எண்ணுகின்றேன். உண்மைகளைத் திரித்துத் தமது பொய்களைத் தொலைதொடர்புச் சாதனங்களில் பரவச் செய்ய நாசிஷ்டுகளிற்கு அனுமதி வழங்க வேண்டுமா..? ஒரு குழந்தையற்ற 52 வயது நிரம்பிய பெண்ணை தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் குழந்தை பெற அனுமதிப்பது நியாயமா...? நாம் பொதுவாகத் தீர்மானிக்கும் கட்சிகள், அமைப்புக்கள் மற்றும் சமயரீதீயான இயக்கங்கள் ஜனநாயகத்தை அடியோடு ஒழிப்பதற்கு ஜனநாயக முறையைப் பயன்படுத்த அவர்களிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை டனிஷ் பிரஜைகளின் பிரதிநிதியாக இருக்க வைப்பதே எமது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் வெற்றிக்கு வழியாக அமையும். இளம் அரசியல்வாதிகளின் எண்ணங்கள் சிதைவடையாமலும் அவர்களுக்கு மீள்பயிற்சி அளிக்காமலும் அவர்கள் பாராளுமன்றத்திற்குள் வருவதற்கு கட்சிகள் ஆவன செய்தல் வேண்டும். அடுத்ததாக பாராளுமன்றத்தில் குறைந்த பிரதிநிதித்துவம் உடைய குழு பெண்களாவர். இங்கே முக்காடினால் பெயர் போன துருக்கி ஒரு பெண்ணை அரசின் தலைவியாகக் கொண்டிருந்தது. பெண்சிசுக் கொலை பற்றி அதிகம் பேசப்படும் இந்தியா ஒரு உறுதியுள்ள பெண்மணியை பிரதமராகக் கொண்டிருந்தது. டென்மார்க்கில் ஒரு போதும் பிரதமமந்திரிப் பதவிக்குரிய வேட்பாளராக ஒரு பெண்மணியும் தெரிவு செய்யப்படாதது என்னை ஆச்சரியத்திலேயே ஆழ்த்துகின்றது. சமுதாயத்தின் தனிப்பட்ட குழுக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்காமல் மக்கள் முழுவதையும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய வகையிலேயே எதிர்கால ஜனநாயகம் கட்டி எழுப்பப்படல் வேண்டும்.

ஏற்கனவே சொன்னது போல் சாதாரண டெனிஷ் பிரஜையின் அரசியல் பங்களிப்பு குறைவானதே. புதிதாக எதையும் சொல்லாமல் நிறையப் பேசுவதே அரசியல்வாதியின் திறமை என்பதை மக்கள் கண்கூடே கண்டது தான் சில வேளை இதன் காரணமாக இருக்கலாம். இந்த முறை செல்லுபடியாகாத பட்சத்தில் "எந்த விமர்சனமும் வேண்டாம்." அல்லது "சந்திக்க முடியாது"அல்லது " நான் ஒரு பரிசோதனையை ஆரம்பித்துள்ளேன்." போன்ற சொற்தொடர்கள் உபயோகிக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவெடுக்கும் நடவடிக்கையைப் பொதுமக்களிடமிருந்து தேவைக்கு அதிகமான தூரத்தில் வைத்தால் ஜனநாயகம் தனது தனித்துவத்தை இழந்து விடாமல் பாதுகாத்தல் வேண்டும். பிரதேசரீதியான அரசியலில் பங்களித்தலானது அதிகளவில் இல்லாவிட்டாலும் அதில் பங்களித்தல் சாத்தியமானதாக இருத்தல் வேண்டும். முடிவெடுக்கும் நடவடிக்கை தேவைக்கு அதிகமான தூரத்தில் இருப்பதால் மக்கள் தங்களது பங்களிப்பினைக் கைவிட்டு விடுகின்றனர். இப்படியான கைவிடுதலானது சக்தி நிரம்பிய ஜனநாயகத்திற்குப் பேரிடியாக அமையும்.

இன்று வரை எனது கருத்துப்படி ஜனநாயக முறையே சிறந்த ஆட்சி முறையாகும். அதைவிடச் சிறந்த ஆட்சி முறையை எதிர்காலத்தில் கண்டுபிடிப்போமா என்பது தெரியாத ஒன்றாகும். ஜனநாயக முறை இருக்கும் வரை அதனைச் சிறப்படையச் செய்வதற்கு உதாரணமாக வேலைத் தளங்களில் பொருளாதார ஜனநாயகத்தை மேலும் அதிகரிக்கலாம்.

ஜனநாயகம் மேலிடத்து முடிவில் மட்டுமே தங்கியிருக்காமலிருக்க நகரசபை அலுவலகங்களில் தொழில் புரிவோர் பொதுமக்களுக்கு எழுதும் கடிதங்களில் விளங்கிக் கொள்ள வேண்டிய டெனிஷில் எழுத ஆரம்பிக்க வேண்டும். இன்றைய குழந்தைகளே நாளைய பிரஜைகள். அதனாலேயே பாடசாலைகளிலும் உயர்கல்வியிலும் குழந்தைகளுக்கும் இளைஞர் களுக்கும் சமுதாயத்தின் அமைப்புப் பற்றியும் எப்படியான உரிமைகளும் கடமைகளும் எமக்கிருக்கிறது என்பது பற்றியும் கற்பித்தல் வேண்டும். சமுதாய அபிவிருத்தி பற்றிய ஆர்வத்தை முடிவெடுப்பது பற்றிய நடவடிக்கையும் சமூகக் கல்வியைக் கட்டாய பாடமாக ஆக்குவதன் மூலமுமே கொண்டு வர முடியும்.

நான் போரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் ஒரு நாட்டிலிருந்து வந்திருக்கும் ஒரு அகதி. எவரின் கையில் துப்பாக்கி இருக்கின்றதோ அவர்களிடமே அதிகாரமும் இருக்கின்றது. அதனாலேயே ஒரு திறமையான நிர்வாக அமைப்புடைய நாடான டென்மார்க்கிற்கு வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். டெனிஷ் மக்கள் ஜனநாயகம் தானாகத் தொடரும் எனக்கருதுவதாலேயே பொதுவாக அவர்கள் அரசியல்வாதிகளைப் பற்றி அக்கறை கொள்வதில்லை என்று எண்ணுகின்றேன். தனிப்பட்ட ஒருவரால் ஆக்கிரமிக்கப்படாமல் இருக்க வேண்டுமாயின் பொதுமக்களும் அரசியலில் பங்களிப்பது அவசியமாகும்.

அரசியல் அமைப்புக்களானது பொதுமக்களின் ஆர்வத்தைக் கவரப்

www.tamilarangam.net

பிரத்தியேக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். தமது கதகதப்பான கதிரைகளில் அமர்ந்து தொலைக்காட்சியில் பரப்பப்படும் நிகழ்வுகளைப் பார்ப்பது இலகுவானது என நினைக்கின்றனர்.

கொப்பனேக்கனில் இருந்து நேரடி ஒலி-ஒளி பரப்பின் மூலம் அரசியல்வாதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு இருக்கும் போது எதற்காக அவர்களை நேரடியாகத் தேடிச் செல்லல் வேண்டும். இந்த முன்னேற்றத்தை நான் மனவருத்தத்துடனேயே பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் பெரிய மண்டபத்தில் கூடியிருக்கும் ஏழு மனிதர்களுக்கு முன்பாக ஒருவர் எழுந்து நின்று பேசும் சூழலையே இது உருவாக்கியுள்ளது. ஒரு நாட்டின் பிரதமமந்திரியே ஒரு சிறிய நகரத்துக்கு வந்து நடைபாதையால் செல்லும் மக்களுடன் பேசுவதைப் பிற நாடுகளில் காண்பது மிகவும் அரிதான ஒன்றாகும். இப்படியான அரிய சந்தர்ப்பத்தை மக்கள் பயன்படுத்தாதது என்னை ஆச்சரியத்திலேயே ஆழ்த்துகின்றது. எம் அனைவருக்கும் இந்நாட்டு நடைமுறையில் ஏதாவது ஒன்றில் அதிருப்தியிருக்கும். பிரதம மந்திரியானவரிடம் சென்று அவரது துவிச்சக்கரவண்டித்தலையுபகரணத்தை தொலைக்காட்சியில் பார்த்துச் சிரிப்பதை விட்டுவிட்டுக் கல்விக்கான அரசாங்க உதவித்தொகையைக் கூட்டினால் என்னவென்று ஏன் கேட்கக் கூடாது....?

அதிகமான மக்கள் அரசியலில் பங்களிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். ஷெல்(Shell) ஐயும் பிரஞ்சு நாட்டு வைனையும் பகிஷ்கரிப்பது போல் ஒவ்வொரு விடயத்தையும் மேலும் எப்படித் திறம்படச் செய்யலாம் என எமது அரசியல்வாதிகளுக்குத் தெரியப்படுத்தலாம். எந்த வழியில் நாங்கள் செல்ல வேண்டும் என்பதை முடிவு செய்வதில் பெரும்பாலானோர் பங்களிப்பதன் மூலம் ஜனநாயகத்தைச் சிறப்படையச் செய்யலாம். புள்ளடியிடுவதுடன் மட்டும் ஒருவருடைய கடமை முடிந்து விடாது. பெரும்பாலான மக்கள் கலந்துரையாடல்களில் கலந்துகொள்வதன் மூலம் பலரது கருத்துக்கள் அரசாங்கத்தின் முன் வைக்கப்படும். ஒரு காரியத்துக்காகப் பாடுபட்ட மக்கள் தாமும் தமது நாடு பற்றிய ஒரு முடிவை எடுக்கத் தமது பங்களிப்பினை அளித்ததாக உணருவர். கூடுதலான பங்களிப்பும் குறைந்த அரசு அதிகார முடிவும் (bureaukrati) விபரமான தகவலும் டென்மார்க்கை மேலும் ஜனநாயக பூர்வமாக்கும்.

*-சாரதா. பாலகிருஷ்ணன்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள்...?

**மார்ச் 8**

உலக நாடுகள் அனைத்தும் இந்த நாளினை பெண்கள் தினமாக கொண்டாடப்பட்டு ரீவி இலும், பத்திரிகையிலும் இதுபற்றிய விவாதங்களும், கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. உலகின் எந்த சமூகத்திலும் பெண்கள் ஆண்களின் அடக்கு முறையிலிருந்து தப்பித்து விடவில்லை. இருப்பினும் எங்கள் நாட்டுப் பெண்கள் அதுவும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்துப் பெண்களின் பிரச்சனைகளை எனக்குத் தெரிந்த வரையில் உங்களோடு பகிர்ந்து கொள்வதே எனது இந்தக் கட்டுரையின் நோக்க மாகும்.

டென்மார்க்கினைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் இங்கு கூடுதலாக வந்தவர்கள் ஆண்கள் தான். ஆரம்ப காலகட்டத்தில் குடும்பங்களைப் பிரிந்து தனித்து வந்த ஆண்கள் அகதி அந்தஸ்த்துப் பெற்று ஒரு சில மாதங்களில் அவர்களுடைய மனைவி பிள்ளைகளும் இங்கு வந்து விட்டார்கள். ஆனால் திருமணம் செய்யாமல் வந்த இளைஞர்கள் இன்று இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா..... என்று போய் திருமணம் செய்து வருகின்றார்கள். இதில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானோர் ஒருவருக்கொருவர் எந்த அறிமுகமும் இல்லாதவர்கள். திருமணமாகி சில மாதங்களில் பெண்கள் இங்கு வந்து விடுகின்றார்கள். புதிய நாடு- மாறுபட்ட சூழல், மொழி, கலாச்சாரம், காலநிலை..... வந்து ஒரு சில நாட்களில் மொழிப் பாடசாலைக்கு போக வேண்டும் அல்லது வேலைக்குப் போக வேண்டும். அத்துடன் தினமும் வீட்டு வேலை, குழந்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படியொரு சூழ்நிலையில் பெரும்பாலான பெண்கள் பல பாதிப்புக்களையும், பிரச்சனைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றார்கள். வீட்டு வேலை, சமையல் வேலை, குழந்தைப் பராமரிப்பு சகலதையும் பெண்களே முழுமையாக செய்ய வேண்டியுள்ளது. கணவனைப் பொறுத்தவரை அவருக்கு சமையல் தெரியாது, குழந்தைக்கு குளிக்கவார்க்கத் தெரியாது, குழந்தைக்கு உடுப்புப் போடத் தெரியாது, குழந்தைக்கு உணவூட்டத் தெரியாது. கணவன் களைத்துப் போய் வந்தால் அவருக்கு தேனீர் போட்டுக் கொடுப்பது, சாப்பாடு போட்டுக் கொடுப்பது சகலதும் ஒரு பெண் செய்ய வேண்டும். கணவன் வெளியில் போய் விட்டால் அவர் வரும் வரை காத்திருந்து உணவு பரிமாற வேண்டும், தூங்கிவிட்டாலும் கூட எழுந்து வந்து சாப்பாடு போட்டுக் கொடுத்து அவர் சாப்பிட்டு முடியும் வரை பார்த்திருந்து மீண்டும் தூக்கத்திற்குச் செல்ல வேண்டும். ஆனால் இப்படியொரு ஆணுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் போல் பெண்ணுக்கு வரும் போது அவள் தன்னுடைய தேவைகளைத் தானாகத் தான் செய்து கொள்ள வேண்டும்.

பல குடும்பங்களில் குடிப்பழக்கமுள்ள ஆண்கள் தன்னுடைய சந்தோஷத்திற்காக, பலரை வீட்டிற்கு கூட்டி வந்து திடீரென மனைவியிடம் ஐந்து பத்துப் பேருக்கு சாப்பாடு செய்யச் சொல்லிவிட்டு அவர் நண்பர்களுடன் உட்கார்ந்து குடிக்க ஆரம்பித்து விடுவார். மனைவியினால் என்ன செய்ய முடியும்.... கணவனே கண்கண்ட தெய்வமாயிற்றே, தெய்வத்தின் உத்தரவினை மீற முடியுமா. அவள் சமையல் செய்தே ஆக வேண்டும். எதிர்த்து ஏதாவது கூறி விட்டால் சண்டை ஆரம்பித்துவிடும். அவள் அடி, உதை வாங்க வேண்டும், அல்லது வீட்டில் உள்ள தளபாடங்கள், ரீவி, றேடியோ... எல்லாம் அடித்து நொருக்கப்பட்டுவிடும். இப்படியான சம்பவங்கள் இப்போதும் பல குடும்பங்களில் நிகழ்கின்றன.

அடுத்து, ஒரு குடும்பத்தில் திட்டமிடாமலோ அல்லது எதேச்சையாகவோ ஒரு பெண் கற்பம் தரித்து விட்டால் அவள் விரும்பினாலும் கணவனுக்கு விருப்பமில்லாவிடின் அவள் கருவைக் கலைத்தேயாக வேண்டும். கருக்கலைபின் போது ஒரு பெண்ணின் உடல் நிலை பாதிக்கப்படுவது பற்றி கணவன் நினைத்துப் பார்ப்பதில்லை. சில குடும்பங்களில் ஏற்கனவே பல குழந்தைகள் இருந்தாலும் கூட கணவனின் வற்புறுத்தலில் அவள் மேலும் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டியுமுள்ளது. இப்படியாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு பெண் தனது முடிவினை சுயமாக எடுத்துக் கொள்ள முடியாத நிலை. மனைவியினுடைய பேச்சையோ அவள் கருத்தையோ பல கணவன்மார்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அது சரியா பிழையா என்று சிந்திப்பது அல்லது விவாதிப்பதைக் கௌரவக் குறைவு என்று நினைக்கின்ற ஆண்கள் கூடப் பலருண்டு. இப்படிப்பட்டவர்கள் எந்த விடையமானாலும் தானேதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவெடுத்துக் கொள்வர். வரவு செலவு, வங்கிக் கணக்கு சகலதும் அவர் பொறுப்பில் தான் இருக்கும். அவளுடைய உழைப்பையோ அல்லது சோஷல் வருமானத்தில் (நகரசபை அடிப்படை உதவிப் பணம்) கூட கணவனின் உத்தரவு இல்லாமல் அவள் செலவு செய்ய முடியாது.

இப்படியாக ஆண்களின் அடக்கு முறைகளால் பெண்கள் பல வழிகளில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமாயின் பாதிக்கப்படும் ஒவ்வொரு பெண்களாலும் தான் முடியும். தன்னுடைய பாதிப்புக்களையும், கவலைகளையும் தனக்குள் மூடி மறைத்து, கலாச்சாரம், பண்பாடு என்று பொய்யான வாழ்க்கை வாழ்ந்து நம்முடைய எதிர்கால சமுதாயத்திலும் இப்படியான சீரழிவுகள் தொடர நாமும் காரணமாகி விடக்கூடாது. இதை பெண்கள் கவனத்தில் கொண்டு செயல்ப்பட வேண்டும்.

*–செல்வி.*

# விமர்சனக் கடிதம்...

தற்போது புலம்பெயர்ந்த தமிழ் சஞ்சிகைகளிடத்தில் விமர்சனமானது ஒன்றை அழிப்பதற்காகப் பாவிக்கப்படுவதாக பலர் கருதுகின்றனர். இது தவறான கருத்தாகும். ஒன்றை அழிப்பதற்காக ஒரு போதும் விமர்சனத்தைப் பாவிக்க முடியாது. காரணம் விமர்சனம் எனப்படும் போது அது ஒன்றின் ஆக்கத்திற்கானதாக இருக்கின்றது. இருந்த போதிலும் விமர்சனங்கள் மக்கள் நலனின் அடிப்படையில் இருக்கும் பட்சத்திலேயே மக்கள் நலனை மையமாகக் கொண்ட ஒன்றை ஆக்கவும் அதே வேளை பாட்டாளி வர்க்க விரோதக் கருத்துக்களை அழிக்கவும் உதவும். பாட்டாளி வர்க்கத்திற்கு எதிரான கருத்துக்களைப் பரப்பும் சஞ்சிகைகளின் அடிப்படையினைப் புரிந்து கொண்டு அதனை அடிப்படையிலிருந்து விமர்சித்தால் ஒழிய விமர்சனமானது ஓர் ஆக்கபூர்வமானதாகத் தென்படாது. இதை விட ஒரு சஞ்சிகை மீது விமர்சனம் செய்யப்படுகின்றது என்றால், விமர்சனத்துக்குள்ளான அச்சஞ்சிகை இயங்கியலின் அடிப்படையில் விமர்சனத்தை ஆராய்ந்து அதனடிப்படையில் தனது கருத்தில் பிழையிருக்கின்றதா என்பதைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டறிய முற்பட வேண்டும். மாறாக என் மீது இவன் யார் விமர்சனம் செய்ய, என்ற எண்ணத்தில் பார்த்தால் விமர்சனம் ஒரு போதும் நன்மை பயக்காது. மாறாக விமர்சனம் என்ற சொல் இழிச்சொல் என்ற கருத்து மக்கள் மத்தியில் உருவாகும் நிலை ஏற்படும். ஏன் தற்போது ஒரு சஞ் சிகை மீது விமர்சனம் செய்யப்பட்டால் அது தன்னை பாதுகாக்க முற் படுகின்றதே தவிர, மாறாக அதைப்பற்றி ஆராய முற்படுவதில்லை. இதை விட விமர்சனம் செய்யும் போது வசனத்தால் சாடுதல் தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும். அவ்வாறு வசனத்தால் சாடும் போது விமர்சனம் தனது இலக்கை விட்டு வேறு திசைக்கு நகர்வதை அவதானிக்க முடியும்.

ஒரு சஞ்சிகை விமர்சனம் செய்யப்படும் போது அச்சஞ்சிகையின் ஆசிரியர் குழுவால் அவ்விமர்சனம் பற்றி நன்கு ஆராயப்படல் வேண்டும். மாறாக இவர் யார் எமக்கு எழுதுவது போன்ற தன்மை ஏற்படின் அங்கு விமர்சனம், விமர்சனம் என்ற தன்மையை இழந்து வேறு திசைக்குத் திருப் பட்டு வெறும் எழுத்து மோதல்களாகவே மாறிவிடும் அபாயமும் உண்டு. இத்தோடு விமர்சனம் செய்பவர்கள் ஏதோவொரு வர்க்க நலனின் அடிப் படையில் நின்றே எழுதுவார்கள். அது பாட்டாளி வர்க்க நலனின் அடிப் படையாய் இல்லாவிடின் அவ்விமர்சனம் பற்றி அச்சஞ்சிகை அதிகளவு அக்கறை கொள்ளத் தேவையில்லை. இதனை அடிப்படையாக வைத்து தோழர் மாவோவின் விமர்சனம் பற்றிய மேற்கோள் ஒன்றைக் கீழே தருகின்றேன்.

எம்மிடம் குறைபாடுகள் இருந்தால், அவை சுட்டிக்காட்டி விமர்சனம் செய்யவதற்கு நாம் அஞ்சுவதில்லை. ஏனெனில் நாம் மக்களுக்குத் தொண்டு செய்கின்றோம். எவராயினும், அவர் யாராயிருந்தாலும் பரவாயில்லை, நமது குறைபாடுகளைச் சுட்டிக் காட்டலாம். அவரது விமர்சனம் சரியாய் இருந்தால் நாம் அவற்றைத் திருத்திக் கொள்வோம். அவர் முன்வைப்பது மக்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தால் நாம் அவற்றைச் செயற்படுத்துவோம்" என்கிறார். உண்மையில் மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் எழுதப்படும் அனைத்து விமர்சனங்களும் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியவை. இன்று தமிழ்ச்சஞ்சிகைகளில் பலர் பல விமர்சனங்களை எழுதிவருகின்றனர். அவ்வாறு எழுதப்பட்டு வரும் விமர்சனங்களைப் பார்த்தால் அங்கு மக்களைச் சென்றடையும் விதத்தில் அவை எழுதப்படாமை காணக்கூடியதாக இருக்கும். அதாவது ஒரு சஞ்சிகையில் வந்த ஆக்கம் தொடர்பாக விமர்சனம் வெளிவருவதாயின் முதலில் அவ்வாக்கம் பற்றிய ஆய்வுபூர்வமான, விஞ்ஞான ரீதியான, இயங்கியலின் அடிப்படையில் விமர்சனத்தின் பார்வை இருத்தல் அவசியம்.

www.tamilarangam.net

இருப்பினும் மக்கள் தொண்டர்கள் என தம்மைக் கூறிக்கொண்டு அவர்களின் இரத்தத்தை (உழைப்பை) உறிஞ்சத் துடிப்பவர்களை விமர்சிக்கும் போது அவர்களை எவ்வளவு மக்கள் மத்தியில் இருந்து அன்னியப்படுத்த முடியுமோ அவ்வளவிற்கு அன்னியப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகியு ள்ளது.

இவர்களை அந்நியப்படுத்துவதென்பது மிகுந்த கடினமான விடையம். காரணம் தாம் மக்களின் தொண்டர்கள் என்பதற்காக எதையும் செய்யத் தய ங்காதவர்கள். இவர்கள் பால் தத்துவம் இல்லை. இலக்கு இல்லை. எல்லாவற்றையும் விட தாம் வாழ வேண்டும் என்ற நோக்கம் படைத்த தவர்கள் என்பதால் இவர்களிடமிருந்து வரும் சொற்பதங்கள் மக்களை தமது பக்கம் இழுக்கும் வகையிலேயே காணப்படும். அமிர்தலிங்கத்தின் பேச்சு, காசியானந்தனின் கவிதைகள் போன்றவைகளை உதாரணங்களாகக் காட்ட முடியும். இப்படிப்பட்டவர்களை விமர்சிக்கும் போது இவர்கள் மக் கள் மனதில் ஏற்படுத்தியுள்ள தம்மீதான நம்பிக்கையை உடைக்கும் வகை யில், விமர்சனங்கள் அடித்தளத்தை தொடும் வகையில் அமைவதால் மட் டுமே இவர்களை மக்கள் மத்தியில் இருந்து தூக்கியெறிய முடியும்.

### சஞ்சீவி பற்றிய பார்வை....

உங்கள் பத்திரிகை 33 இதழ்களை வெளிக்கொண்டு வந்துள்ளது. இன்று பற்பல இன்னல்கள் இடதுசாரித் தன்மையுள்ள பத்திரிகைகளுக்கு ஏற்படுவது வழக்கம். அதனிலும் விட இலங்கைப் பிரச்சினைகள் மேல் அதிக நாட்டம் வைத்தால் பத்திரிகை துரோகத் தன்மையுள்ளது எனப்பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டு பத்திரிகையின் உண்மையான கருத்து எடுபடாத அளவிற்கு பிரச்சாரம் செய்யப்படுவதும் வழக்கமாக இருக்கும் இக்காலத்தில் 33 இதழ்களைக் கொண்டு வந்தது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆரம்பத்தில் பிள்ளையார் படத்துடன் டெனிஸ்-தமிழ் நட்புறவுச் சங்கத்தின் பத்திரிகையாக வெளி வந்த போதும், தற்போது இதன் வடிவம் மாற்றப்பட்டு இடதுசாரித்தன்மை கொண்டுள்ளமை மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. ஒவ்வொரு இதழ்களிலும் வளர்ச்சி காணப்பட்ட போதிலும் இறுதியாக வெளிவந்த 30வது இதழுக்குப் பின்னால் கணணியினால் எழுதிவருவதும் ஓர் அழகைக் கொடுக்கின்றது. இருந்த போதும் 30வது இதழுக்குப் பின் இன்னும் சில விடயங்களைச் சேர்த்திருக்கலாம். அதாவது 30வது இதழுக்குப் பின்னால் நீங்கள் அதிகளவு அரசியல்க் கட்டுரைகளைத் தவிர்த்து கவிதை, கதைகளின் மூலம் சமூகத்தில் காணப்படும் முரண்பாடுகளை ஆராய்கின்றீர்கள். கவிதை கதை என்பவற்றின் மூலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆராயப்படும் அனைத்து விடயங்களும் மக்களிடம் இலகுவில் சென்றடைகின்றது என பலர் கருதுகின்றனர். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை அவதானிப்போமானால் கவிதை ஒரு குறிப்பிட்ட சில சொற்பதங்களைக் கொண்டு ஒரு பெரிய விடயத்தைப் பற்றிக் கூறிவிட முடியும். அவ்வாறு கூறப்படும் விடையம் எல்லோருக்கும் விழங்கும் என்பதும், எல்லோராலும் அதன் உட்கருத்தை புரிந்து கொள்ள முடியும் எனவும் கூறிவிட முடியாது. அத்துடன் அவ்வாறு புரிந்து கொள்ளப்படும் அவ்விடையம் ஓர் நல்ல கவிதை என்ற தலைப்பில் தற்போதைய சமூகத்தில் கதைக்கப்படுமே ஒழிய அது ஒரு சிந்தனையைத் தூண்டும் நிகழ்வாக இருப்பது மிகக் குறைவானதே.

இதே போல் கதையை எடுத்துக் கொள்வோமானால் கதைகளில் கையாளப்படும் வசனநடைகள், சொற்பிரயோகங்கள் என்பன மிக இலகுவானதாகவும் மக்களை இலகுவில் சென்றடையக் கூடியதாக இருந்த போதும் கதைகள் மக்களால் கதைகளாகவே பார்க்கப்படுகின்றது. மாறாக அதில் கையாளப்படும் சமூக முரண்பாடுகள் மக்களின் கண்களுக்கு மறைந்து காணப்படும். இதைவிட தற்போதைய சமூகத்தில் கதைகள் எனப்படும் போது கற்பனையிலேயே எழுதப்படுகின்றன என்ற கருத்தும் உள்ளது. எனவே சமூக முரண்பாட்டை இவை இரண்டாலும் மக்களுக்குக் கூறுவதால் அவை சமூகத்தில் புத்திஜீவிகளுக்கிடையில் ஒரு மாற்றத்தை உருவாக்க வழிவகுக்குமே தவிர சாதாரண மக்கள் மத்தியில் ஒரு மாற்றத்தை உருவாக்குவதென்பது கடினமான விடையமாகும். எனவே உங்கள் பத்திரி கையில் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது நல்லது என நான் கருதுகின்றேன். ஒரு கட்டுரை சமூக முரண்பாட்டை மையமாகக் கொண்டு எழுதப்படுகின்றது என்றால் அக்கட்டுரையில் நாலாபக்கமும் அவ்விடையம் தொடர்பாக ஆராயப்பட்டிருக்கும். அவ்வாறு ஆராயப்படும் போது சமூகத்தில் எங்கு தவறு உள்ளது என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு மக்களுக்கு ஏற்படும். எனவே இனிவரும் இதழ்களிலா வது கட்டுரைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது நல்லது என்பது எனது கருத்தாகும்.

இதழ் 32ல் 'உங்கள் கருத்தென்ன...?' என்ற தலையங்கத்தின் கீழ் டென்மார்க்கில் நடைபெறும் விவாகரத்துப்பற்றிய கேள்வியை பலரிடம் கேட்டிருந்தீர்கள். அக்கேள்வியை 6 தமிழர்களிடம் கேட்டிருக்கின்றீர்கள். அதில் 5 ஆண்கள். உண்மையில் இக்கேள்வியை நீங்கள் கேட்க வேண்டியது பெண்கள் மத்தியில்தான். காரணம், தற்போதுள்ள ஆணாதிக்கச் சமூக அமைப்பில் ஒடுக்கப்பட்டு இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்பவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் தான். இவர்களிடமிருந்து தான் இதற்கான பதிலை நீங்கள் அறிதல் அவசியம். இதைவிட விவாகரத்துக் கோரப்படுவதால் இச்சமூகத்தில் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற கருத்தை பலர் கூறியிருக்கின்றனர். ஆனால் இச்சமூகத்தில் பெண்கள் மீது நடாத்தப்படும் ஒடுக்கு முறையிலிருந்து பெண்கள் தம்மைப் பாதுகாப்பதற்காகவே விவாகரத்துக் கோரும் நிலை ஏற்பட்டது. ஆதலால் தற்போது இது பற்றி தவறான கருத்துக்குப் பதிலளிக்க வேண்டின் பெண்களிடமே இதை அதிகமாக இக்கேள்வியைக் கேட்டிருக்க வேண்டும். இத்துடன் இன்றைய காலகட்டத்தில் இக்கேள்விக்கான விடையை மக்களிடமிருந்து கேட்கும் அதே வேளை உங்கள் கருத்தையும் முன்வைத்திருத்தல் அவசியம். அது 32வது இதழிலும் இல்லை. 33வது இதழிலும் இல்லை. ஏன் உங்கள் கருத்து முன்வைக்கபபடவில்லை. மக்கள் கருத்தை கேட்கும் போது அக் கருத்துக்கள் சரியானவையா.. பிழையானவையா.. எனச்சுட்டிக் காட்டியிருக் கலாம்.

இவை போன்ற கேள்விகள் மூலம் மக்களின் கருத்தை அறிந்து பாட்டாளி வர்க்க சமூகச் சிந்தனையுள்ள கருத்துக்களைப் புகுத்துவதன் மூலமே மக்களை உங்கள் பக்கம் திரட்ட முடியும். இவற்றோடு சமூகத்தில் அல்லது அன்றாடம் டென்மார்க்கில் நடக்கும் பிரச்சினைகளை ஒட்டி ஆக்கங்கங்கள் இருந்தால் நன்றாக இருக்கும் என்பது எனது கருத்து.

–சுமதி.

---

## சிறுவர் மலர்...!

மலர் 33ல் சிறுவர்மலரை காகமும், சஞ்சீவியும் இணைந்து வெளியிடுவதாய் அறியத்தந்திருந்தோம். இருந்தும் ஏற்கனவே தடைபட்டு போயிருந்த பாடத் திட்டமானது, அண்மையில் இடம் பெற்ற தமிழ் ஆசிரியர்களினது சந்திப்பின் பிரகாரம் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கமைய பாடத் திட்டமானது அடுத்த வருடத்தின் தொடக்க காலத்தில் வெளிவர இருப்பதாலும், அதற்கான வேலைத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாலும் சிறுவர்மலரினை நிறுத்தியுள்ளோம் என்பதனை அறியத் தருகின்றோம்.

-சஞ்சீவி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இறும்பூதல்...!

செவ்வாய்க் கோளத்தில்
எவரும் இதுவரை
பறக்க விடாதிருந்த
அரை ஞாண் துண்டொன்று
தொங்கிக் கொண்டது.

வேவுப் படைகளும்
காவற் படைகளும் அங்கு
ஆள் நடமாட்டம் உண்டோவென
குத்துமதிப்பாய்ச் சேதி சொல்லும்.

இதுவரை அங்கே
மனித உயிர்களே
இல்லை என்ற தகவல்.

ஆனாலும்...
ஆபத்தானதும்!
புத்திசாலித் தனமானதும்!!
வரலாற்றைக் கொண்டதும்!!!
அழிக்கப்பட வேண்டியதுமான...!
ஏதோ வகையான பிராணிகள்
சுய நகர்வு கொள்வதாக
ஆணித்தரம்.

வேவு காவற் படைகள்
தலை கால் புரியாத
தலைமைக்கு...

அவை அனுப்பிய சேதிகளில்
இவை தடித்த எழுத்தினதாய்.

லோகநாதன்.செ

www.tamilarangam.net

# இடைவெளிகள்...

## காயாவுடன் ஒரு சந்திப்பு!

-சஞ்சீவியின் சார்பில் முரளி.

மலர் 34க்காக ஒருவரைச் சந்தித்து இம்முறையும் எழுதுவது நல்லது என்று மனம் விரும்பியபோது காயாதான் என் கண்முன்வந்து நின்றாள். ஏற்கனவே இவள் பற்றிய அறிமுகம் எனக்கு நிறையவே இருப்பதாலும், இரண்டு வேறுபட்ட கலாச்சாரச்சூழ்நிலைக்குள் முழுமையாக முகம் கொடுத்துக் கொண்டிப்பதாலும் காயாவைச் சந்தித்து எழுதுவது நல்லது எனப்படவே எனது விருப்பத்தை அவளிடம் தெரியப் படுத்தினேன்.



'என்னையா....? அப்படி என்ன தான் கேட்டு எழுதப் போகின்றீர்கள்...? "என்று என்னை திருப்பிக் கேள்விகளைக் கேட்டாள். 'நாங்கள் வழமையாகக் கதைப்பது போலத் தான் ஆனால் சில கேள்விகளைக் கேட்பேன் அதற்கு உன்னால் முடிந்த பதிலைச் சொல் என்றேன்.

எப்பொழுது கதைப்போம்....என்றாள். நானும் எப்பொழுது கதைப்போம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றேன். சிறிது நேரம் யோசித்தாள். நாளாந்த பாடசாலை முடிந்தால் AEROPIC க்குப் போக வேண்டும். (AEROPIC என்றால் இசையுடன் சேர்ந்து செய்து கொள்ளப்படும் ஒருவகை நடன உடற்பயிற்சி) ரெனிஸ் விளையாடப் போகவேண்டும்....வொலி போல் விளையாடப் போக வேண்டும்... சனிக்கிழமை பரதநாட்டியம்... தற்போது ஆபிரிக்க நடனம் படிக்கத் தொடங்கியிருக்கின்றேன்... எப்போது..? என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

பல சிக்கல்களுக்கு மத்தியில் செவ்வாய்க் கிழமை மாலை 7.00 மணிக்குச் சந்திப்பது என முடிவெடுத்துக் கொண்டோம். செவ்வாய்க் கிழமை காயாவுக்காக காத்திருந்தேன். களைத்து, சோர்ந்து துவண்டு போய் வந்தாள். இன்று விட்டால் உன்னைப் பிடிக்க முடியாது எப்படியும் கதைத்து எழுத வேண்டும். பெரிதாய் ஒன்றும் அடுக்கெடுக்காமல் சும்மா கதைக்கத் தொடங்கினோம்.

என்னுடைய பெயர் காயத்திரி யேசுரட்னம், வயது 16, 4வயது இருக்கும் போது இங்கே வந்தனான். நான் இப்போது 9ம் வகுப்புப் படிக்கின்றேன். இது தான் என்னைப் பற்றிய சிறு சுருக்கம்.

**சஞ்:** இந்தப் 12 வருட கால டெனிஷ் வாழ்க்கையில் உங்களுக்குப் பிடித்தமானவை.....?

**காயா:** இங்கே எல்லாவற்றுக்கும் கூடுதலான சுதந்திரம் இருக்கின்றது. அதிக கட்டுப்பாடுகள் இல்லை. அதிகமான சுதந்திரமும் கட்டுப்பாடும் இல்லை என்பதால் நாம் எதையும் செய்து விடவும் முடியாது. பொதுவாக எல்லோருக்கும் சமமான அந்தஸ்த்து இருக்கின்றது. கணவன் மனைவியில் சேர்ந்து சமைப்பது தொடக்கம் வேறு வேலைகள் வரையில் பகிர்ந்தே செய்து கொள்ளுகின்றார்கள். சில தமிழர்கள் நினைக்கலாம் நாங்களும் சமைத்துக் கொடுக்கின்றோம் தானே என்று. ஆனால் டெனிஷ்க்காரர் நினைத்துச் செய்வது போல இவர்கள் நினைத்து உதவுவதில்லை. சில தமிழர்கள் விதிவிலக்காக இருக்கின்றார்கள் தான். இதே போல் பொதுவாக பலபேர் சேர்ந்து கதைக்கும் இடங்களில், ஒரு தமிழ்ப் பெண் ஒரு கருத்துக்கு எதிர்க்கருத்துத் தெரிவித்தால் உடனே அவளது கணவன் அவளைக் கட்டுப்படுத்த முனைவார். மாறக கணவன் கதைக்கும் போது மனைவி கட்டுப்படுத்த முனைந்தால் அங்கு பிரச்சினையே வேறு.

இங்கே டெனிஷ் பாடசாலைகளில் ஆசிரியர்களுடன் விரும்பியவாறு எந்த விடயங்கள் பற்றியும் விவாதிக்கலாம், வாதிடலாம். நாங்கள் சொல்வது தங்களுக்குப் புதுக்கருத்தாயிருக்கின்றது, இதைத் தற்போது ஏற்றுக் கொள்ளா விட்டாலும் இது பற்றி யோசிக்கலாம் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்வார்கள். தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் விவாதிப்பது மட்டுமல்ல, கருத்துக்கள் சரியென்றாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். என் வயதொத்த ஒரு டெனிஷ்க்காரன் ஒரு கருத்தை முன்வைக்கும் போது அது சரியெனப்பட்டால் உடனே அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார் கள். ஆனால் தமிழர்கள் மத்தியில் ஒரு கருத்து வைக்கப்பட்டால் அது நல்லதாக இருந்தாலும் நாங்கள் சின்ன ஆட்கள் என்று கருத்தைத் தட்டிக் கழிப்பது மட்டுமல்லாமல் தாங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பார்கள்.

ஒரு டெனிஷ்க்காரனுக்கு ஆண், பெண் நண்பர்கள் என்று நிறையவே இருக்கின்றார்கள். ஆனால் தமிழர்களில் ஆணுக்கு ஆண்களும் பெண்ணுக்கு பெண்களுமே நண்பர்களாயிருக்கின்றனர். தமிழர்கள் மத்தியில் ஒரு வயதொத்த ஆணும் பெண்ணும் சும்மா கதைத்தாலே போதும். உடனே என்னென்னவோ கதைகள் பரவிவிடும்.

என்ன டெனிஷ் வாழ்க்கையில் நல்லது எனக் கேட்ட போது தமிழிலுள்ள கூடாதவற்றைக் கதைக்கின்றேன் என்று நினைக்கின்றீர்களா....? அவர்களுடைய நல்ல அம்சங்களை எடுத்துப் பார்க்கும் போது தமிழிலுள்ள அதே விடயங்கள் கூடாதவயாகவே இருப்பதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதை போல் தமிழிலுள்ள நல்லவற்றை நோக்கும் போது டெனிஷிலுள்ளவை மிகவும் கசப்பானவையாகவே இருக்கின்றது.

சஞ்: கூடுதலான நேரத்தினை டெனிஷ் சமுதாயத்துடன் பழகிவிட்டு தமிழ் வாழ்க்கைக்கு வந்தவுடன் எப்படியான வித்தியாசங்களைக் காணுகின்றீர்கள்.... உணருகின்றீர்கள்.?

**காயா:** பள்ளிக்கூடங்களிலும், விளையாட்டிடங்களிலும், அல்லது வேறு இடங்களிலும் டெனிஷ் நண்பர்களுடன் பழகும் போது விரும்பியது போல் சிரித்து மகிழ்ந்து ஆடிப்பாடித் திரிவோம். பின்னர் தமிழர்களுடன் சேரும் போது மெதுவாகக் கதைக்க வேண்டும், மெதுவாகச் சிரிக்க வேண்டும், காலைக் கையை நீட்டாமல் நிமிர்த்தாமல் அடக்க ஒடுக்கமாய் அமர்ந்திருக்க வேண்டும். இப்படிப் பல. இப்படியான வேளைகளில் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் தான் இருக்கின்றோம். அண்மையில் எங்கள் இடத்தில் ஒரு கலைவிழா நடைபெற்றது. அங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது பல இளைஞர்கள் முன்னுக்கு வந்து ஆடினார்கள். அந்த இசைக்கு நானும் ஆட வேண்டும் என்றே விரும்பினேன். ஆனால் ஆடவில்லை. அதில் போய் ஆடக் கூடாது என்பதால் என்னைக் கட்டுப்படுத்தியிருந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சஞ்:** இங்கு வாழும் தமிழ்க் குடும்பங்கள் பற்றி என்ன அறிந்திருக்கின்றீர்கள்....?

**காயா:** பல பெண்கள் ஆண்களுக்குள் அடங்கித்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பல பேர் ஆண்களுக்கு அடங்கித்தான் வாழ வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இது பிழை என்றே நான் கருதுகின்றேன். பெண்கள் ஆண்கள் மீது மதிப்பாய் இருக்க வேண்டுமேயொழிய அடங்க வேண்டும் பயப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதே போல் ஆண்களும் பெண்களை சமமானவர்கள் என்று மதிக்கத் தெரிவதோடு, தங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது.

தமிழ்க் குடும்பங்களில் குறிப்பாக பெண்கள் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வதால், பல பேர் கெட்டித்தனமாக இருப்பதை அவதானிக்கலாம். இந்த நாட்டில் படிப்பதற்கு நிறையவே வசதிகளும் வாய்ப்புக்களும் இருக்கின்றது. இவர்கள் படிப்பதற்கு முன்வரலாம். ஆனால் குடும்பப் பொறுப்புக்கள் காரணமாகவும், வேறு சுமைகள் காரணமாகவும் படிப்பதைப் பற்றி நினைக்கவே விருப்பம் இல்லாமலும் இருக்கின்றார்கள். இதே போல் இங்கே படித்துக் கொண்டிருக்கும் பல யுவதிகளும் வேறு சில காரணங்களுக்காக படிப்பை இடையில் நிறுத்தி விடுவது கவலைக்குரியதாகும். இதே போல் வெவ்வேறு இடங்களில் எமது பெண்கள் பலர் உயர் படிப்புக்களுக்கு எடுபட்டிருப்பதும் படித்துக் கொண்டிப்பதையும் கேள்விப்படும் போது மிகுந்த சந்தோசமாய் இருக்கின்றது.

**சஞ்:** இந்த நாட்டின் நிறவெறியினால் ஏதாவது பிரச்சினைகளைச் சந்தித்ததுண்டா...?

**காயா:** நான் சின்னனிலிருந்து இன்று வரையும் விபரமாக அறிந்த நாடு இது தான். ஏதோ ஒரு அந்நிய நாட்டில் வாழ்கின்றோம் என்ற உணர்வு எனக்கு இருப்பதில்லை, ஆனால் வெளியில் வெளிக்கிட்டுத் திரியும் வேளையில் ஏதாவது நிறவெறியைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் என்னால் உணரக்கூடியதாக இருந்தால் அதிகமாகக் கவலைப்படுவேன், வெட்கப்படுவேன். கவலைப்படுவது என்பதை இங்கே சாதாரணமாகச் சொல்ல முடியாது. அதை என்னால் விளக்கவும் முடியாது. இந்த உணர்வை பல பேர் நன்கு அனுபவத்தின் மூலம் அறிந்திருப்பார்கள். பல பேர் நாளுக்கு நாள் இப்படியானவற்றை சந்தித்துக் கொண்டும் இருக்கின்றார்கள். இந்த வேளையில் எனது சொந்த நாட்டை அதிகம் நினைப்பதுண்டு. அந்த நிலையில் நாம் எல்லாம் அங்கு போய் வாழலாமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதும் கேள்விக்குறியே....?

**சஞ்:** பாடசாலைகளில் விளையாட்டிடங்களில் நிறவெறியைச் சந்திப்பதில்லையா...?
**காயா:** வகுப்பில் அல்லது நாளாந்தம் பழகும் இடங்களில் என்னைத் தனிப்பட்டமுறையில் பாதித்த மாதிரி ஒன்றும் இதுவரையில் நடக்கவில்லை. ஆனால் வகுப்பில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் பகிடிக்கா வெளிநாட்டவர்களைப் பற்றியும் அகதிகளைப் பற்றியும் ஏதாவது கேலிக் கதைகளைச் சொல்லிச் சிரிக்கும் போது நான் வேதனைப்படுவதுண்டு. அதே வேளையில் அவர்களை எதிர்த்து விவாதித்ததும் உண்டு. வகுப்பு நேரங்களிலும் ஏதாவது விவாதிக்கும் போது ஐரோப்பியர்கள் தான் எதிலும் கெட்டிக்காரர்கள், புத்திசாலிகள் என்று விவாதிப்பது எனக்குப் பிரச்சினையில்லை. ஆனால் ஆசிய ஆபிரிக்க நாட்டவர்களையும் கேலி செய்து ஒப்பிட்டுக் கதைக்கும் வேளையில் நான் ஒரு போதும் விட்டுக் கொடுத்ததில்லை. விட்டுக் கொடுக்கவும் மாட்டேன்.

**சஞ்:** நீங்கள் படித்து முடித்தவுடன் எதிர்காலங்களில் இந்த டெனிஷ் சமுதாயம் உங்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கும் என்று நினைக்கின்றீர்களா.....?
**காயா:** எங்களுக்கு நல்ல சந்தர்ப்பத்தை வழங்குவார்கள் என்றே எதிர் பார்க்கிறேன். ஆனால் தற்போதையைப் போல் நிறவெறியும், இனத்துவேசமும் கூடிக்கொண்டு போகையில் எமக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கமாட்டாது. ஆனால் எமது சந்ததியினர் வளர்ந்து வந்து வேலை செய்யும் காலகட்டங்களில் அதற்கான தேவைகள் நிறையவே இருக்கும் என நினைக்கின்றேன். ஆனால் தற்போதையது போன்ற வேலைத் திண்டாட்டம் கூடிக்கொண்டு போனால் டெனிஷ்க்காரர்களுக்குத் தான் முக்கியம் கொடுப்பார்கள்.

**சஞ்:** இங்கு வாழும் சில தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தனித்து டெனிஷ் மொழி தான் கதைக்க வேண்டும், தெரிந்திருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். இது பற்றி.....?
**காயா:** கட்டாயமாக நாங்கள், அல்லது எமது அடுத்த சந்ததியினர் தமிழில் எழுதவோ வாசிக்கவோ தெரியாவிட்டாலும் கதைக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஏன் என்றால் எங்கள் பல குடும்பத்தவர்கள், வயோதிபர்கள் இலங்கையில்த் தான் இருக்கின்றார்கள். அவர்களைச் சந்திக்கும் போது தமிழ் தெரிந்தால்த் தான் உரையாட முடியும். அவர்களும் பேரனோடு கதைக்க வேண்டும் பேத்தியோடு கதைக்க வேண்டும் என்று எவ்வளவோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசையாக இருப்பார்கள். அப்போது தமிழ் மொழி தெரிந்தால் தான் ஒருவரோடு ஒருவர் கதைக்க முடியும். இது மட்டுல்ல நாங்கள் இங்கே எவ்வளவு காலம் தான் எப்படித்தான் வாழ்ந்தாலும் நாங்கள் யார் என்பதை நிறம் காட்டிக் கொடுத்து விடும். இதுவே எங்களுக்குள்ள பெரிய பிரச்சினை. யூக்கோசிலவக்கியா நாட்டவர்களை இந்தச் சமூகம் மிக வேகமாக ஏற்றுக் கொண்டது போல் எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் அவர்கள் நிறத்தால் டெனிஷ்க்காரர்கள் போல் இருப்பதே. எமது அடுத்த சந்ததி வளர்ந்து இனிவரும் காலங்களில் டெனிஷ்க்காரர்களைத் திருமணம் செய்து கொண்டாலும் பிறக்கப் போகும் குழந்தைகளில் கறுப்பர்களுக்கான அடையாளங்கள் இருந்தே ஆகும். அதாவது ஒரு கறுப்புத்தாய்க்கு குழந்தையாகவோ அல்லது ஒரு கறுப்புத் தந்தைக்கு குழந்தையோ பிறந்து விட்டால் அது கறுப்பினக் குழந்தையாகவே கணிக்கப்படுகின்றது அல்லது ஏதோ ஒரு வகையில் கறுப்பினத்துக்குரிய பாதிப்புக்களை அடைந்து கொண்டிருக்கின்றது. எனவே எமது குழந்தைகள் தங்கள் சொந்த மொழியைத் தெரிந்திருப்பது மிகவும் அவசியம்.

**சஞ்:** இறுதியாக ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா...?

**காயா:** பொதுவாக சில தமிழர்கள் கதைக்கும் போது நீ கறுப்பு நான் வெள்ளை அல்லது அவள் கறுப்பு இவள் வெள்ளை என்று கதைக்கின்றார்கள். சில பேர் இதையிட்டு பெரிதாகவே விவாதித்து விமர்சிக்கின்றார்கள். இதையிட்டு சில பேர் மனவேதனையும் அடைகின்றார்கள். சில பேர் சந்தோசமும் அடைகின்றார்கள். இதை ஏன் சொல்லுகின்றேன் என்றால் எங்களுக்குள்ளேயே நிறபேதங்கள் இருக்கும் போது டெனிஷ் மக்கள் எம்மைப் பார்த்து கறுப்பர் என்பதில் என்ன பிழையிருக்கின்றது.

இதே போல் தமிழ்ப் கற்பிணிப்பெண்களைச் சந்திக்கும் போது என்ன பிள்ளை பிறக்க வேண்டும் என்று விரும்புகின்றீர்கள் என்று கேட்டால் உடனே ஆண் குழந்தை என்று சொல்லுகின்றார்கள். இதைக் கேட்கும் போது ஒரு வித வெறுப்புத் தான் வருவதுண்டு. ஏன் பெண் குழந்தை பிறந்தால் என்ன....? கடைசியாக நான் அறிந்த செய்தியொன்று... இங்கே பொதுவாக கற்பிணிப் பெண்களுக்கு என்ன குழந்தை வயிற்றில் இருக்கிறது என்று சொல்வது வழக்கம். ஆனால் தமிழர்களுக்கு இது பற்றிச் சொல்வதில்லையாம். யோசித்துப் பார்க்க மிகுந்த கவலையாய் இருக்கின்றது. இதே பெண்களும் தங்கள் குழந்தை வெள்ளையாய் பிறக்க வேண்டும் என்பதற்காக குங்குமப்பூ சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நாட்டில் எல்லோரும் ஒரே மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆண்களைப் போல் எதையும் எம்மால் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் உறுதியும் எமக்கிருக்கு. இதை எல்லாப் பெண்களும் நினைக்க வேண்டும். அப்படி நினைக்கும் போது ஆண் பிறந்தால் என்ன... பெண் பிறந்தால் என்ன....? எல்லாமே குழந்தைகள் தான்.

இன்னுமொரு விடயம் பொதுவாக தமிழ் மக்கள் இது பற்றி கதைப்பதையோ அல்லது சிந்திப்பது பற்றியோ எனக்குத் தெரியாது. அதாவது இந்தச் சூழல் மாசடைவது பற்றி. பெரும்பாலானவர்கள் கார் வைத்திருக்க வேண்டும், ஓட வேண்டும் என்பதைக் கௌரவமாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். வீட்டிலிருந்து பக்கத்திலுள்ள கடைக்குப் போவதற்குக் கூட காரையே பாவித்துக் கொண்ருக்கின்றார்கள். இது தமிழர் மட்டுமல்ல பல டெனிஷ்க்காரர்களும் தான் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதனாலும் சூழல் நாளுக்கு நாள் மாசடைந்து கொண்டிருக்கின்றதை மறந்து விடுகின்றார்கள். எவ்வளவுக்கு கார்ப் பாவனையைக் குறைக்க முடியுமோ அவ்வளவுக்கு குறைப்பது இந்த உலகத்திற்கு நல்லதே. இதைப் பல பேர் தெரியாமல்த் தான் செய்து கொண்டிக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன், இனிமேல் இது பற்றி தமிழ் மக்கள் சிந்திப்பது நல்லது. பல டெனிஷ்க்காரர்கள் முடிந்தளவு வாகனப் பாவனைகளைக் குறைத்துக் கொண்டு தான் வருகின்றார்கள். இதுவே நான் சொல்ல விரும்புவது.

சிரமம்பாராது சஞ்சீவிக்காக இவ்வளவு நேரத்தையும் ஒதுக்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். காயாவுடன் கதைத்த போது வெளிநாட்டவர்களைப் பற்றிச் சொல்லப்படுகின்ற சில கேலியான கதைகளைக் கேள்விப்பட்ட போது என் மனமும் மிகவும் வேதனைப்பட்டது. அவற்றில் சில சின்னக் கதைகளை இங்கு நீங்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இங்கே தருகின்றேன்.

1. ஒருநாள் கொஞ்ச மாணவர்கள் பண்டிப்பண்ணை ஒன்றைப் பார்க்கச் சென்றார்கள். முதலில் சில டெனிஷ்க்காரர்கள் உள்ளே நுழைந்ததும், அதே வேகத்தில் மூக்கைப் பொத்திக் கொண்டு வெளியே ஓடி வந்தார்கள். ஏனென் றால் ஒரே நாற்றம். பின்னர் அங்கு நின்ற வெளிநாட்டவர்கள் உள்ளே போன போது பண்டிகள் எல்லாம் வெளியால் ஓடி வந்து விட்டனவாம்.

(தொடர்ச்சி பக்கம் 49)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**1974-ல் பானிபட் நகரில் பிறந்து, 73 ஆண்டுகள் வாழ்ந்து 1987ஆம் ஆண்டு காலமான தலைசிறந்த முற்போக்கு எழுத்தாளர் குவாஜா அகமது அப்பாஸ் ஏராளமான சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதியுள்ளார். இவர் மாபெரும் உருதுக் கவிஞர் ஹாலியின் பேரனாவார். இவருடைய மர்ம மனிதன் என்னும் சிறுகதையினை இம்முறை பிறமொழிக் கதையாக இங்கு தருகின்றோம்.**

*சிறுகதை.........................................................................................*

# மர்ம மனிதன்

**– கே. ஏ. அப்பாஸ்**

அவன் எங்கள் பகுதிக்கு வந்ததிலிருந்தே அவனைப் பற்றி ஏதேதோ கிசுகிசுக்கப்பட்டது.

'சிறையிலிருந்து தப்பி ஓடிவந்த தண்டனைக் கைதியாயிருப்பான். அதனால் தான் ஒதுங்கிவாழ்கிறான். யாரையும் சந்திப்பதில்லை. யாருடனும் பேசுவதில்லை. பக்கத்து வீட்டுக்காரனிடமும் கூட அவன் ஒருநாளும் பேசியதில்லை' என்றான் ஒருவன்.

'மூன்று மாதமாக இங்கிருக்கிறான். அவன் பெயர் கூட இங்கு யாருக்கும் தெரியாது' என்றான் இன்னொருவன்.

'பாவம் தீராத வியாதியால் துன்புறுகிறான். அவனது முகம் வெளிறிப் போயிருப்பது தெரியவில்லை? உடம்பில் ஒரு சொட்டு ரத்தம் கூட இல்லை. அவனுக்கு கச நோயாயிருக்கலாம். அதனால் தான் மற்றவர்களுக்கு நோய் பரவி விடக்கூடாதே என ஒதுங்கி வாழ்கிறான்' எனப் பகன்றான் மற்றொருவன்.

'நோயாளியா? என்றைக்காவது அவன் மருந்து பாட்டிலுடன் வந்ததைப் பார்த்திருக்கிறாயா? இருக்காது' என மறுத்துப் பேசிய அடுத்த நபர் தனது குரலைத் தணித்து மெதுவாக 'அவன் ஒரு சி.ஐ. டி. ஆள். போலீசுக்குத் தகவல் கொடுப்பவன். கிரிமினல் குற்றவாளி என்றால் எப்போதே பிடிபட்டிருப்பான். அவனோ பட்டப் பகலில் நடமாடுகிறான். ஆனால் அவன் ஏதாவது வேலை செய்து யாரும் பார்த்ததில்லை. அப்படியானால் வீட்டு வாடை கொடுப்பதற்கும் சாப்பாட்டுக்கும் அவனுக்கு எங்கிருந்து பணம் வருகிறது? போலிஸ் இலாகாவிலிருந்து தான். சந்தேகமேயில்லை' என்றான்.

அந்த வழியில் அவனைப் பற்றிக் காரணம் கற்பிப்பதை மறுத்துப் பேச முடியாது தான். அவன் வாழ்க்கை நடத்துவதற்கு, வெளிப்படையாக வருவாய் ஏதுமில்லை என்பது தெரிந்த விஷயமே. பல நாட்கள் அவன் அறையை விட்டு வெளி வருவதேயில்லை. திடீரென்று ஒருநாள் மிரண்டு போன எலியைப் போல் வெளியே வருவான், மெதுவாகக் கதவை இழுத்துப் பூட்டுவான். பின்னர் சர்வ ஜாக்கிருதையாக சப்தம் ஏதுமின்றி சந்தைக் கடந்து செல்வான். தலையைக் குனிந்தவாறே வேகமாக அடி எடுத்து வைப்பான். மதியம், இனம்புரியாத ஒரு நோயாளியைப்போல் நடந்து வருவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தான். ஒருநாள் குடிகாரனைப் போல் தள்ளாடித் தள்ளாடி சுவரை பிடித்தவாறே அவன் சந்தில் வந்ததை நாங்கள் பார்த்திருக்கிறோம். அவன் குடித்திருக்கவில்லை. முகம் வெளுத்துப் போயிருந்தது.குளி விழுந்த கண்கள், குடிகாரனுக்குரிய முகமில்லை, தீராத வியாதியால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரக்தியடைந்த ஒரு மனிதனாகவே அவன் காணப்பட்டான். ஒவ்வொரு தடவை திரும்பி வரும் போதும், அரிசி, மாவு, பருப்பு வகைகள், உப்பு, எண்ணை முதலியவற்றைக் கொண்ட ஒரு துணிப்பையுடன் தான் அவன் வருவான். சந்துக்கு. வெளியே மெயின் ரோட்டிலிருக்கும் பலசரக்குக் கடையில் அவற்றை வாங்கி வருவான். தான் வாங்கும் பொருட்களுக்கு உடனே பணம் கொடுத்து விடுவான். ஒருநாளும் கடன் சொன்னதில்லை என பலசரக்குக் கடைக்காரன் கூறினான். எந்த ஒரு முறையான வேலையும் செய்யாமல் இவற்றிகெல்லாம் அவனுக்குப் பணம் ஏது? இதுவே அந்தப் பகுதியிலுள்ள எங்களனை வருக்கும் புரிய முடியாத ஒரு புதிராகவிருந்தது.

ஒருநாள் எங்கள் குடியிருப்புப் பகுதியின் பொதுக் குழாயடியில் நாங்கள் குழுமியி ருந்த சமயம் அவன் சந்துக்குள் வந்தான். வழக்கம்போல் பலசரக்குச் சாமான்களைக் கொண்ட பையை வைத்திருந்தான். அன்று மிகவும் களைத்துப் போயிருந்தான். அவனது பழைய காலணிகளில் தூசி அப்பியிருந்தது. அவனது உதடுகள் உலர்ந்து வெடித்துப் போயிருந்தன. ரத்தமேயில்லை போலும்! சுவரைப் பிடித்தவாறு அவன் மெதுவாக நடந்து வரும்போது அவனது கால்கள் தடுமாறின. தடுமாறித் தடுமாறி வந்த அவன் சிறிது நேரத்தில் கீழே விழுந்து விட்டான். அவனுக்கு உதவி செய்ய ஓடினோம். உணர்விழந்த நிலையில் கிடந்தான். எங்களிலிருவர் அவனைத் தூக்கினோம். மூன்றாமவர் பையை எடுத்தார். எண்ணைச் சீசா உடைந்து தரையில் தண்ணீருடன் கலந்து எண்ணைப் படலமாகக் காட்சி தந்தது.

அறைவாசலில் கொண்டு போட்டதும் அவனுக்கு உணர்வு வந்தது. குழிவிழுந்து, சுருங்கிக் கிடந்த கண்களை விழித்து நடுங்கிய கைகளைக் கொண்டு ட்ரவுசர் பைக்குள்ளிருந்த சாவியை எடுத்துக் கொடுத்தான். கதவைத் திறந்ததும் துர்நாற்றம் எங்கள் நாசித் துவாரங்களைத் தாக்கியது. அறை இருட்டாகக் கிடந்தது. காற்றோ, வெளிச்சமோ அறைக்குள் ஊடுருவியதாகத் தெரியவில்லை. ஒரு குகை மாதிரி, இல்லை ஒரு கல்லறை மாடம் போன்றிருந்தது அந்த அறை. ஐஸ்கிறீம் விற்கும் ஹர்பான்ஸ் பயத்தினால் முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஆட்டோ டிரைவர் கோவிந்தும் அவ்வாறே பயந்து போய் மூக்கைப் பிடித்துக்கொண்டே வேகமாகப் போனான். பத்திரிகை ஆபீஸில் ஃபுருப் ரீடராகவிருக்கும் சாக்சேனா மட்டும் பெயர் தெரியாத தனது பக்கத்து வீட்டுக்காரனுக்கு உதவி செய்ய முன்வந்தான். மூலையில் கிடந்த கட்டிலை இழுத்தான். அறைக்குப் பின்னாலிருந்த சின்ன ஜன்னலைத் திறந்தான். திடீரென வெளிச்சத்தைக் கண்டதும் அவன் மிரண்டு விழித்தான். அறையில் குப்பையும் கூளமுமாக கிடந்தது. கட்டிலுக்கு மேலேயுள்ள கம்பியில் கிழிந்துபோன ஒரு கம்பளியும், சில சாக்குகளும் கிடந்தன. அவைதான் அவனது படுக்கை. அடுப்புக்குப் பக்கத்தில் மூலையில் கழுவிச் சுத்தம் செய்யப்படாத பாத்திரங்கள் கிடந்தன. கரி, சாம்பல், பாதி எரிந்த விறகுக்கட்டைகள், காய்ந்துபோன காய்கறிகள், மற்றும் வெங்காயச் சருகுகள் குவிந்து கிடந்தன, அங்கிருந்த அனைத்துமே கூனித்துப் போய் சவக்களையுடன் காணப்பட்டன.

அறையை நோட்டம்விட்ட சாக்சேனா கட்டிலைப் பார்த்தான்.

' ஏதாவது பேசவேண்டுமே. உன் பெயர் என்ன தம்பி? ' என்றான்.

' என்ன பேராயிருந்தால் உங்களுக்கென்ன? '

இந்தக் கடுப்பான பதிலை சாக்சேனா எதிர்பார்க்கவில்லை. அவன் நிலைகுலைந்து விட்டான்.

' நல்லது... சும்மாதான் கேட்டேன். உனக்கு ஏதாவது உதவி செய்யலாம் என்று நினைத்தேன். நீ உடல் நலமின்றியிருக்கிறாய். ஆஸ்பத்திரிக்கு போகலாமா? '

( தொடர்ச்சி பக்கம் 28 )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒருவசன
# கவிதையைப்போல்...

எல்லா மனிதர்களும்
துப்பாக்கி பற்றி
அறிந்திருக்கின்றார்கள்.

அவற்றின் நாமங்களும் கூட
தெரிந்து வைத்திருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில்
நான் கூடத் தெரிந்து
வைத்திருந்தேன்.

அதனாலேயே சில பட்டங்களும்
கிடைத்தன.

எனது சப்பாத்துக் காலைக்
கண்டதும்-
பயந்து நடுங்கி
தலை குனியும் அனமூனாப்

www.tamilarangam.net

பூக்களைப் பார்த்த பின்னர்
துப்பாக்கியும் மண்ணாங்கட்டியும்.

அந்தச் சிறிய அற்பப் பூவிற்கு
இருக்கக் கூடிய உணர்வாவது
என்னிடம் இருக்க வேண்டாமா...?

ஏதோ ஒரு காலத்தில்
என் தலை மீதும்
ஒரு சப்பாத்துக் காலால்

திருவடித் தீட்சை நடக்கும்.
அது வரை.....

' அனமுனா 'க்களுடன்
' ருவண்டா ' மழலைகளுடன்
' செஞ்சோலை 'ச் சிறார்களுடன்
' பொஸ்னிய 'க் குழந்தைகளுடன்
சிரித்து மகிழ விரும்புகின்றேன்
ஒரு வசன கவிதையைப் போல்.

- ஆதவன்.

www.tamilarangam.net

( 25ம் பக்கத் தொடர்ச்சி )

' எனக்கு ஒன்றுமில்லை. ' அவன் குரல் கம்மியிருந்தாலும் உறுதியானதாகவும் தீர்மானமானதாகவுமிருந்தது. ' எனக்கு உடல் நலமில்லை என்று யார் சொன்னது? என் பிழைப்பைக் கெடுக்கப் பார்க்கிறீர்கள்? என் வயிற்றிலடிக்க விரும்புகின்றீர்கள் '.

அவன் மருட்சியடைந்திருக்கிறான் என சாக்சேனா முடிவு செய்தான். அதுவே அவனுக்குள்ள நோயாகவுமிருக்கலாம். பேச்சை மாற்றுவற்காக ' நீ ஏன் தனியாக இருக்கிறாய்? ' என்று கேட்டான்.

' வேறு யாருமில்லை. அதனால்தான் '. சிறிது நேரத்திற்குப்பின் பெருமூச்சு விட்டான். ' இன்னும் ஏதாவது கேள்வி கேட்க விரும்புகிறீர்களா? '

' ஆம். வாழ்க்கை நடத்துவதற்கு நீ என்ன செய்கிறாய்? '

அவனது இதயத்தின் அடி ஆழத்திலிருந்து ஒருவித ஒலி கிளம்பியது. இருமல் ஒலியாகவுமிருக்கலாம். ' வாழ்க்கை நடத்துவதற்கான வேலை எங்கே கிடைக்கிறது? வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நான் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறேன். எனக்கு முன்னர் பதிவு செய்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைத்த பின்னரே எனக்குக் கிடைக்கும். ஒரு ஆட்டோ ஓட்ட வேண்டுமானாலும் அதற்கு லைசெனஸ் வேண்டும். லைசென்ஸ் வாங்குவதற்கு பணம் வேண்டும். பணத்திற்கு எங்கே போவது? வேலை எங்கே யிருக்கிறது? நான் என்ன செய்கிறேன்? ' மீணடும் அவன் மனம் தடுமாறியது போலிருந்தது.

அவன் ஒரு கிரிமினல் குற்றவாளியாயிருப்பான். அல்லது ஜேப்படித் திருடனா யிருப்பான் யார் கண்டது. ஒருவகை விபச்சாரத் தரகனாகக்கூட இருக்கலாம். அல்லது போதைப் பொருள் வியாபாரியாயிருக்கலாம். இவ்வாறெல்லாம் நினைத்த சாக்சேனா கடைசியாக அவனிடம் ' நீ என்ன செய்கிறாய்? ' எனக் கேட்டான்.

அவனது ஒளிமங்கிய உயிரற்ற கண்கள் ஒருகணம் மினுமினுங்கின. நகைச் சுவையாக எதையோ சொல்லப் போவதைப் போல் ' நான்... நான்... நான்... வியாபாரம்... '. திடீரென மனத்தை மாற்றிக்கொண்டு பேசாமலிருந்தான். சாக்சேனா அவனது கண்களையே பார்த்தான். அவற்றில் இருள் சூழ்ந்தது. அழுக்கடைந்த அவனது சட்டையின் கைப் பகுதியில் கருஞ்சிவப்புக்கறை தெரிந்தது. ரத்தம். பச்சை ரத்தம்! பீதியடைந்த சாக்சேனா அறையைவிட்டு ஓடினான். அதைத் தொடர்ந்து அவனை அச்சுறுத்தும் வகையிலான ஒரு பேய்ச்சிரிப்பு.

மறுநாள் சாக்சேனா வேலைக்குச் சென்றான். மேசையில் அவன் முன்னால் கிடந்த ஃபுருப் பார்க்க வேண்டிய காகிதங்களில் ரத்தத் துளிகள் இருப்பது போல ஒரு பிரம்மை. வீடு திரும்பும்போது பஸ்சில் அவனுக்கருகே நிற்பவர்களையெல்லாம் சந்தேகக் கண்கொண்டு பார்த்தான். அவனது நரம்பு நாளங்களில் கத்தியால் யாரோ குத்துவது போலுணர்ந்தான். குடியிருப்புப் பகுதியில் அந்தப் பெயர் தெரியாதவன் வீட்டைக் கடக்கும் போது அது பூட்டிக் கிடப்பதைப் பார்த்தான். மறுநாளும் அதற்கு மறுநாளும் அதற்கடுத்த நாளும் கூட அவ்வீடு பூட்டியே கிடந்தது. இரவு நேரங்களில் சாக்சேனாவினால் தூங்க முடியவில்லை. அவன் இறுக்கமாகவும் பதைபதைப்புடனும் காணப்பட்டான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அவனது மனைவி " உங்களுக்கு என்ன நேர்ந்தது? கொலை செய்து விட்டு வந்தவனைப் போல் இருக்கிறீர்களே. ஏன்? " என்று கேட்டாள். மறுநாள் நன்றாகப் பொழுது விடிவதற்கு முன்பேயே சாக்சேனா வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டான்.

நாங்களனைவரும் தண்ணீர் குழாயடியில் வரிசையாக நின்று கொண்டிருந்தோம். போலீஸ் வேன் வந்தது. நான்கு போலிஸ்காரர்கள், ஒரு சப்இன்ஸ்பெக்டர் மற்றும் சாக்சேனா!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களை நேராக பூட்டிக் கிடந்த அந்த வீட்டிற்கு இட்டுச் சென்றான் சாக்சேனா. போலீஸ்காரர்கள் பூட்ஸ் காலால் பூட்டிய கதவை உடைத்தனர். பழைய பாடாவதியான பலகை உடைந்து கதவு திறந்தது. இப்போதும் முன்னர் மாதிரியே துர்நாற்றம் மூக்கைத் துளைத்தது. ஜன்னல் கதவைத் திறப்பதற்காக சாக்சேனா விரைந்தான். காலைக் கதிரவனின் ஒளிக்கீற்றுகள் அறைக்குள் வெளிச்சம் கொடுத்தன.

அவன் கட்டிலில் உணர்வற்றுக் கிடந்தான். சட்டையில் பட்டிருந்த ரத்தம் காய்ந்து கருப்புப் புள்ளிகளாயிருந்தன. சப்இன்ஸ்பெக்டர் அவனது கையைத் தொட்டார். உடம்பு குளிர்ந்துவிட்டது உயிரில்லை.

' முன்னரே இறந்திருக்க வேண்டும். போஸ்ட்மார்ட்டம் செய்ய வேண்டும் '.

உண்மையில் போஸ்ட்மார்ட்டத்திற்கு அவசியமில்லை. உடம்புக்கு அருகாமையில் சிலதுண்டுக் காகிதங்கள் கிடந்தன. சப்-இன்ஸ்பெக்டர் அவற்றை எடுத்து ஒன்றன்பின் ஒன்றாகப் படித்தார்.

' இர்வின் மருத்துவமனை, புதுடில்லி, ரத்தவங்கி 21-1-1961 ஷாம்லாவின் மகன் ராம்லால், ரூ.10 / கொடுக்கப்பட்டது.'

' நகராட்சி மருத்துவமனை, டெல்லி 5-5-1961 ரஹீம்பக்ஸின் மகன் முகமது பக்ஸ். ரூ.10 / கொடுக்கப்பட்டது.'

' அரச மருத்துவமனை, ரோடக். 7-6-1961 ஜான்லூயிஸ் ரூ.10 / கொடுக்கப்பட்டது.'

' இர்வின் மருத்துவமனை, புதுடில்லி காஸிடாவின் மகன் கோட்டுராம். 11-7-1961. ரூ.10 / கொடுக்கப்பட்டது,'

இதேபோல் ஏராளமான சீட்டுக்கள் கிடந்தது. ஆனால் கடைசிவரை அவனது உண்மையான பெயரை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தக் காகிதங்களில் ஒரு பத்திரிகைத் துண்டும் கிடந்தது. அதில் ' உயிர் காக்கும் ரத்தவங்கி ' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் ரத்ததானம் செய்வதற்காக வரிசையாக நிற்பவர்களின் புகைப்படங்களும் காணப்பட்டது. அந்தப் படங்களுள் இங்கே துணிமணிகளில் கொந்த ரத்தம் பரவிப் படர்ந்திருக்க சவமாக கிடக்கும் அந்த இளைஞனின் படமும் உள்ளது!

போலீஸ் அதிகாரியிடமிருந்து பேப்பரை வாங்கி சாக்சேனா படித்தான்.

டில்லி மருத்துவமனைகளில் ரத்தவங்கிகளுக்குப் பொறுப்பான மருத்துவர்கள், வேலையில்லாத பொருளாதார நெருக்கடி மிகுந்த சிலர் வாழ்வதற்காக ரத்ததானம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அம்பலப்படுத்தினர். இவ்வாறாக ஒரு மனிதன் பல, வேறுபட்ட பெயர்களில் தனது ரத்தத்தை முப்பது அல்லது நாற்பது தடவைகளுக்கு மேல் கொடுத்திருக்கிறான். இப்படி அடிக்கடி ரத்ததானம் செய்வது, தானம் செய்பவனது உயிருக்கே உலைவைக்கும் என ஒரு மருத்துவர் நமது நிருபரிடம் கூறினார்.

-முற்றும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# " கற்பு " பெண்களுக்கு(ரியதா) மட்டுந்தானா?

~ சத்யர

"கற்பு" என்றால் எங்கள் தமிழர் சமுதாயத்திலே வரலாற்று முக்கியம் வாய்ந்ததாகவும், புராண இதிகாசங்களிலே சிறப்பான ஓர் அம்சமாக இருப்பதும் வெள்ளிடைமலை. முஸ்லீம் சமுதாயத்தில் உள்ள பெண்களுக்குக் கூட இந்தக் கற்பு முக்கியமானதாக கருதப்படுகிறது. பொதுவாக எங்கள் எல்லோர் மத்தியிலும் "கற்பு" அது பெண்களுக்கு மட்டுந்தான் சொந்தமானது என்ற கருத்து நிலவுகின்றது. ஏனென்றால் அதிகமான புராண இதிகாசங்களிலும், அரச கதைகளிலும் ஏன் இருபதாம் நூற்றாண்டு கலியுகத்திலும் கூட பெண்ணின் கற்பின் முக்கியத்துவத்தைப் பற்றித்தான் எழுதினார்கள், எழுதுகின்றார்கள். இதனால் தானோ என்னவோ கூடுதலான ஆண்களிடம் "கற்பு" பெண்களுக்குத் தான் உரியது என்ற கருத்து நிலவுகின்றது. அத்தோடு எங்களுக்கும் அதற்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை என்ற எண்ணமும் கூடுதலான இளைஞர்களிடம் காணப்படுவது கண்கூடு.

கற்பு யாருக்குச் சொந்தம் என்பதை மறந்து கற்பு என்றால் என்னென்று ஔவைப் பாட்டியார் சொல்வதைப் பார்ப்போம்; "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" "காவல்தானே பாவையர்க்கழகு" என்று கூறுகிறார். அதாவது கற்பு என்று சொல்லப்படுவது பெண்கள் தங்கள் கணவரின் சொல்லிற்கு தப்பி நடவாமையாகும். அத்தோடு பெண்கள் தங்கள் கற்பிற்கு அழிவு வராமல் தம்மைக் காத்துக்கொள்வதே தமக்கு அழகாம். அதாவது பெண்கள் தங்கள் உயிரைக் கார்ப்பதிலும் பார்க்க, கற்பை பாதுகாப்பதே மானமுள்ள பெண்களுக்கு நன்றாம். இதற்குத்தான் பெண்களைக் "கவரிமான் இனம்" என்கிறார்களாம். அதாவது கவரிமான் தன் மயிரில் ஒரு மயிரை இழக்க நேர்ந்தாலும் உயிரை விட்டு விடுமாம். அது போல்த்தான் மானம் உள்ள பெண்களும் கற்பை இழக்க நேரிட்டால் உயிர் விட்டு விடுவார்கள். அத்தோடு ஔவைப் பிராட்டியார் ஆண்களுக்காகவும் சில வரிகள் சொல்லி வைத்திருக்கிறார். " பிறன் மனை புகாமை அறமெனத் தகும் " " மை விழியார் தம் மனையகன் றொழுகு "அதாவது பிறருடைய மனையாளிடத்தில் போகாமையே எல்லாத் தருமங்களிலும் சிறந்ததும், உயர்ந்ததுமாகும். மை தீட்டிய கண்களை உடைய வேசியர்களது வீடுகளை நீ ஒருபோதும் அணுகாமல் விலகி நட. அதாவது பிறன் மனை எனக் குறிப்பிடுவது உனது மனைவி அல்லாத எந்தப் பெண்ணிடமும் நீ தொடர்பு வைக்காதே. உனக்கு மனைவியாய் அல்லாதவள் எவராயிருந்தாலும் அவள் இன்னொருவனின் மனைவிதானே. இப்படி ஔவையார் பெண்ணிற்கும், ஆணிற்கும் கற்பு பொதுவானது, சொந்தமானது என்பதை எவ்வளவு அளகாக விளக்கி இருக்கிறார். புராணங்களின் கதைகளிற் கூட இராமன் ஏகபத்தினி விரதனாகவும் சீத்தா ராமனாகவும் இருந்தது எல்லோரும் அறிந்ததே. பெண்கள் கூட புராணக் கதைகளில் மனம், வாக்கு, காயம் என்று சொல்லப்படுகின்ற

www.tamilarangam.net

மூன்றினாலும் கற்பு உள்ளவளாக இருக்கவேண்டும். அதாவது மனதினால் இன்னொரு ஆடவனை நினைக்கக் கூடாது. வார்த்தையினால் பிற ஆடவரைப் பற்றி கதைக்கக் கூடாது. (அதாவது மனம் விரும்பி) உடம்பினால் இன்னொருவரை தீண்டக்கூடாது. இதுதான் உண்மையான கற்பின் வரைவிலக்கணம் ஆகும். அதாவது பெண்ணோ, ஆணோ மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் கற்பு உள்ளவர்களாக இருந்தால்தான் உண்மையான கற்பு உள்ளவர்கள் என்று புராணக் கதைகளில் கூறப் பட்டிருக்கிறது. இதற்கு ஒரு உதாரணமாக வில்லி புத்தூர் எழுதிய மகா பாரதக் கதையிலே நடந்த ஓர் நிகழ்ச்சி என் ஞாபகத்திற்கு வருகிறது. மகா பாரதம் என்றால் எல்லோரும் அறிந்திருப்பார்கள். இருந்தாலும் ஓருசிறு விளக்கத்தையும் தருகிறேன். திருதராஷ்டிரனும் பாண்டுவும் அண்ணன் தம்பி. அண்ணன் திருதராஷ்டிரன் பிறவிக் குருடு ஆதலால் தம்பி பாண்டுவே இராட்சியத்தைப் பரிபாலித்து வந்தான். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளை கௌரவர்கள் என்றும் பாண்டவர்கள் என்றும் அழைத்தனர். முனிவரின் சாபம் காரணமாக பாண்டு இறந்தபின் கௌரவர்களும், பாண்டவர்களும் இராட்சியத்தை பரிபாலித்து வந்தார்கள். கௌரவர்கள் இயற்கையாகவே தீய குணம் கொண்டவர்கள். இதனால் பாணடவர்களை வஞ்சமாக சூதுக்களைத்து அவர்களை வென்று 12 வருட வன வாசமும், ஒரு வருட அஞ்ஞாத வாசமும் போகும்படி காட்டிற்கு அனுப்பி விட்டார்கள். அது முடிவடைந்து இராட்சியத்தை திருப்பிக் கேட்டபோது கௌரவர்கள்; பாண்டவர்களுக்கு உரிய அரசை திருப்பிக் கொடுக்க மறுத்து விட்டனர். இதன் பின் போர் புரிந்து அரசைக் கைப்பற்றிய வரலாறே "மகா பாரதம்" எனப்படும். பகவத்கீதையும் மகா பாரதத்தால் கிடைத்ததுதான் எங்களுக்கு.

பாண்டவர்களும் அவர்களின் மனைவியாகிய பாஞ்சாலியும் வனவாசம் செய்யும்போது, பாஞ்சாலி ஒரு மரத்தில் உள்ள மாங்கனியைக் கண்டு ஆசைப்பட்டு அருச்சுனனிடம் அந்தக் கனியை பறித்துத் தரும்படி கேட்டார். அது மரத்தின் உயரத்தில் இருந்ததால் மாங்கனியை எவ்வளவோ கஸ்டப்பட்டு வில் எடுத்து நாண் பூட்டி அறுத்து வீழ்த்தினார். வீழ்த்திய மாம்பழத்தை இவர்கள் இருவராலும் தூக்க முடியவில்லை. ஆதலால் அவரின் தம்பிமார்களையும் அழைத்து, தூக்கிப் பார்த்தார்கள் முடியவில்லை. இறுதியாக நடந்த விடயத்தை அண்ணனிடம் தெரிவித்தனர். அண்ணன் திடுக்கிட்டு இந்த மாம்பழம் ஒரு முனிவருக்குச் சொந்தமானது; அவரின் தவம் முடிவடைந்தும் அவர் வந்து உண்ணும் பழமாகும். அவர் வரும் காலமும் நெரிங்கிவிட்டது. என்னைக் கேட்காமல் இப்படி ஒரு பாதகச் செய்கையை செய்து விட்டீர்களே என்றும் இதை எப்படி மறுபடியும் ஒட்டவைப்பது என்று எண்ணிக் கவலைப்பட்டார். இறுதியாக கிருஷ்ணரை நினைத்து வருந்தி அழைத்து எங்களை முனிவரின் சாபத்திற்கு ஆளாகாமல் காக்கவேண்டும் என்று கெஞ்சி மன்றாடினர். அதற்கு கிருஷ்ணர் கடுமையாக யோசித்துவிட்டு சரி மாம்பழத்தை ஒட்ட வைப்பதானால் ஒரு நிபந்தனை. எல்லோரும் உங்கள் மனதில் உள்ளவற்றை ஒழிக்காமல் சொல்லவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படி நீங்கள் சொன்னால் மாம்பழம் மறுபடியும் மரத்தில் போய் ஒட்டிக்கொள்ளும் என்றார். சரி என்று எல்லோரும் ஒப்புக்கொண்டு ஒவ்வொருவராக சொல்ல மாம்பழம் நிலத்திலிருந்து எழும்பி மேலே மேலே சென்றது. இறுதியாக பாஞ்சாலியின் முறை வந்தது, அவள் சொல்லி முடித்ததும் மாம்பழம் கீழே மறுபடியும் விழுந்துவிட்டது. உடனே எல்லோரும் அதிசயப்பட்டு இது என்ன சோதனை என்று எண்ண கிருஷ்ணன் பாஞ்சாலியிடம் நீ உண்மையை சொல்லவில்லை அதனால் மாம்பழம் விழுந்து விட்டது. இவ்வளவையும் ஏன் சொன்னேன் என்றால் இந்த இடத்தில் தான் பாஞ்சாலியுடைய கற்பின் கதை பிறக்கிறது.

பாஞ்சாலியின் திருமணத்தின் போது அருச்சுனன் கிழப்பிராமண வேடத்தில் போய் வில்லை வளைத்து திருமணம் செய்துகொண்டார். கிழப் பிராமண உருவத்தில் வந்தவர் அருச்சுனன் தான் என்று பாஞ்சாலிக்குத் தெரியாததால் அருச்சுனனுக்கு முன்பு வந்த கர்ணன் வில்லை வளைத்து, வளைக்க முடியாமல் போனதை எண்ணி கர்னனாவது வில்லை வளைத்திருந்தால் நான் இந்தக் கிழப்பிராமணனுக்கு மாலை சூடவேண்டி வந்திருக்காதே. என்று கர்னனை விரும்பி நினைத்தாராம். இதனால் பாஞ்சாலி மனதினால் கற்பை இழந்துவிட்டார். இந்த நிகழ்ச்சி மனதில் இருந்தும் மாம்பழம் ஒட்டும் விடயத்தில் அதைக் கூறவில்லை அதனால்தான் மாம்பழம் கீழே விழுந்ததாம். பின் தான் மனதினால் கற்பிழந்ததைக் கூறியவுடன் மாங்கனி திரும்பவும் ஒட்டிவிட்டதாம். எவ்வளவு பெரிய கொடுமை அந்தக்காலத்துப் பெண்களுக்கு.

எமது சமுதாயத்திலே ஆண்கள் எப்படி இருந்தாலும் பரவாய் இல்லை. பெண்கள் மட்டும் கற்புள்ளவளாக இருக்க வேண்டும். இந்த இடத்தில் ஆண்கள் கொஞ்சம் ஆளமாக சிந்தித்தால் ஒரு ஆணினால் தான் பெண்ணின் கற்பு சீரளிக்கப்படுகிறது. ஒரு பெண் கற்பில்லாதவள், வழுக்கி விழுந்தவள் என்ற பட்டம் பெறுவதற்கு யார் காரணம்? நிட்சயம் ஒரு ஆணாகவோ, பல ஆண்களாகவோ தான் இருக்க முடியும். குற்றத்தைச் செய்வது ஆண்கள். பட்டம் சுமப்பது, தண்டனை அனுபவிப்பது பெண்கள். ஒவ்வொரு ஆண்களும் தன் மனைவியைத் தவிர மற்றய பெண்களை தாயாகவோ, அக்கா தங்கையாகவோ எண்ணினால் கற்பிழந்தவள் என்று ஒரு பெண் எமது சமுதாயத்தில் இருக்கமாட்டாள். எல்லா ஆண்களும் எனது மனைவி அழகுள்ளவளாக இல்லாவிட்டாலும், கற்புள்ளவளாக இருக்கவேண்டும் என்று எண்ணுவது இயல்பு."தாங்கள் எப்படி இருந்தாலும்" அதாவது ஆண்பிள்ளை சேறுகண்ட இடத்தில் மிதித்து தண்ணிகண்ட இடத்தில் கழுவுவார்கள். என்று எங்களூரிலேயே பாட்டிமார்கள் சொல்வார்கள். பெண்ணின் கற்பிற்கு பங்கம் விளைவிக்கும் ஆண்களுக்கே கற்புள்ள மனைவி வேண்டும். கற்புள்ள மனைவிகளை விரும்பும் ஆண்களில் எத்தனை பேர் ஏக பத்தினி விரதனாகவோ, இராமனாகவோ இருக்கிறீர்கள். உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். பெண்ணிற்கு கற்பு

www.tamilarangam.net

முக்கியந்தான் ஆனால் அதே அளவு கற்பு ஆணுக்கும் முக்கியம். இதை ஒவ்வொரு ஆண்களும் சிந்தித்தால் கற்புநெறி தவறிய பெண்களே இருக்கமாட்டார்கள். திருவள்ளுவர் கூட இருவரின் கற்புநெறிகளை எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கின்றார்.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின்.'

'தற்காத்துத் தற்கொண்டாள் பேணி தகைசார்ந்த
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.'

அதாவது கற்பு எனும் மனவுறுதி பெண்ணிடம் உண்டாகியிருந்தால் அந்தப் பெண்ணைவிட பெருமைமிக்கது உலகில் வேறொன்றுமில்லை. அதோடு தன் கற்பு வழுவாமல் காத்து தன் கணவனையும் பேணி தகுதியடைந்த புகழையும் காத்து சோர்வடையாதவளே பெண் என்கிறார். அடுத்து ஆண்களுக்காக.

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.'

'பகை பாவம் அச்சம் பழி என நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.'

அதாவது பிறருடைய மனைவியை (நோக்காதவன்) இச்சித்துப் பார்க்காத பேராண்மை சான்றோர்க்கு அறன் மட்டுமன்று நிரம்பிய ஒழுக்கமும் ஆகும். பகை, பாவம், அச்சம், பழி என்ற தீமைகளும் பிறருடைய மனைவியை நாடிச் செல்பவர்களிடமிருந்து எப்போதும் நீங்காதாம்.

ஆண்களில் சிலர் நினைக்கலாம் நான் பிறருடைய மனைவியிடம் போனால் தானே பாவம். திருமணமாகாத பெண்களிடம்தானே நான் உறவு வைத்துக் கொள்கிறேன். வள்ளுவர்கூட பிறருடைய மனைவியைத்தானே தீண்டக் கூடாதென்றார். அப்படி இல்லை. நான் முன்பு கூறியது உங்கள் மனைவி அல்லாத ஒவ்வொரு பெண்ணும் பிறருடைய மனைவி என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அதேபோல் நீங்கள் திருமணம் செய்யாத எந்த ஒரு பெண்ணும் உங்கள் மனைவி அல்ல. அத்தோடு இக் கட்டுரை ஆண்களைக் குறை கூறுவதற்காக எழுதப்பட்டதன்று. புலம் பெயர்ந்த எங்கள் தமிழ் மக்களில் பெரும்பான்மையான பெற்றோர் ஆண் பிள்ளைகளுக்கு கூடிய சுதந்திரம் கொடுத்து வளர்ப்பதும், இவர்களின் போக்கிற்கு விட்டு விடுவதும் கூடுதலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற சாதாரண நிகழ்ச்சியாகும். பெற்றோர்கள் அற்ற சில ஆண்பிள்ளைகளும் முறை தவறி நடப்பதனை கண்கூடாக காண்கிறோம். இதனால் திருமணம்

www.tamilarangam.net

செய்த பின் குடும்பங்களில் பல பிரச்சனைகளும் இடம் பெறாமலில்லை. சில ஆண் பிள்ளைகள் இளமைத் துடிப்பில் இங்கு டெனிஷ் பெண்களுடன் இருந்துவிட்டு பின் கொஞ்சக் காலம் சென்றபின் அவர்களின் போக்கு இவர்களுக்குப் பிடிக்காமல் விடவே; எனக்கு ஒரு தமிழ்ப் பெண் தேவை! என்று திருமணம் செய்து வாழ்கிறவர்களும் உண்டு. இப்படியான கணவன் மார்களை அடைந்தவர்கள் மற்றவர்கள் முன்னிலையில் நாணிக் கோணிக் குறுகி நிற்பதையும் காணக் கூடியதாக இருக்கிறது. மனைவியின் காதில் விழும்படியாக மற்றவர்கள், தன் கணவனை இந்தப் பெடியன்தான் முன்பு டெனிஷ் பெட்டையுடன் சுற்றித் திரிந்தவன்... என்று கேட்கும்போது அவள் மனம் எவ்வளவு வேதனைப் படும். நீங்கள் செய்யும் தவறு அல்லது உங்கள் கட்டுப்பாடற்ற சுதந்திரம் எவ்வளவு தூரம் உங்கள் மனைவியைப் பாதிக்கிறது.

இயற்கையாகவே பெண்கள் மென்மையான இதையம் படைத்தவர்கள். இத்தகைய வசை மொழிகளைத் தாங்கும் சக்தி எத்தனை கற்புள்ள பெண்களுக்கு உண்டு. தன் கணவன் தன்னைத்தான் நேசிக்கவேண்டும் தனக்கு மட்டுந்தான் சொந்தமாக இருக்கவேண்டும் என்று எல்லா மனைவி மார்களும் விரும்புவார்கள். என் கணவர் உத்தமராய் இருக்கவேண்டும் என்று எந்தப் பெண்தான் விரும்பமாட்டாள். இதற்கு கவிஞர் கண்ணதாஸனின் பாடலில் உள்ள விளக்கத்தைத் தருகிறேன்.

ஒரு இளம் தம்பதியர் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். வெய்யிலின் களைப்பால் ஒரு தென்னை மர நிழலின் கீழ் இருவரும் உட்கார்ந்தார்கள். கணவன் தென்னை மரத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு பெண்ணின் கொங்கைகள் (மார்பகங்கள்) அழகாக இளநீர்க் குலைகள் போல் தொங்குகிறது என்றாராம். அதைக் கேட்ட மனைவி கதறி அழுதாளாம். ஏனென்று கணவன் கேட்க நீர் உமது (அதாவது மனைவியின்) கொங்கைகள் என்று சொல்லாமல் பொதுவாக பெண்களின் என்று சொன்னீர். ஆதலால் நீர் எனைத் தவிர வேறு பெண்களையும் பார்த்திருக்கிறீர். அதனால் தானே அப்படிச் சொன்னீர் என்று கோபித்தாளாம். மனைவி மனம் வேதனைப் பட்டுவிட்தே என்று கணவன் கவலை கொண்டானாம்.

கற்பு என்பது கணவன் மனைவி இருவருக்கும் சொந்தமானது. கற்பில்லாத பெண்ணோடு கூடி வாழ்வதும் நரகந்தான் இதை 'பழிக்கஞ்சாத் தாரதினோடு தனி' அதாவது கற்பில்லாத மனைவியோடு கூடிய இல்வாழ்க்கையும் தீராத வசையை விழைவிக்கும். அதுபோல் ஒருவன் பிறன் மனையாளை இச்சித்தால் இது அவனிடத்தில் உள்ள ஞானம் கல்வி செல்வம் என்ற மூன்றும் கெடுவதற்கு அறிகுறியாகும்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றும் தாரமும் குருவும் தலைவிதிப்படியே என்றும் என்றும் கூறுவதுண்டு. எது எப்படி இருந்த போதிலும் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய விடயம்.

"பெண்ணே உனது கணவர் எப்படி இருந்தாலும் நீ இப்படித்தான் இருக்க வேண்டும்." என்று ஒரு அறிஞர் சொன்னார். இந்த எப்படி இருந்தாலும் என்பதை சற்று ஆழமாகச் சிந்தித்தால் எவ்வளவு கொடுமையானது. அதோடு பெண்கள் இப்படி இப்படித்தான் இருக்கவேண்டும். ஆண்கள் எப்படியும் இருக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொரு ஆண்களுக்கும் கற்புள்ள மனைவி வேண்டும் என்றால் ஆண்களும் கற்பு உள்ளவர்களாக இருக்கவேண்டும். இவ் விடயத்தில் பெற்றோர்களும் கவனத்தில் எடுக்க வேண்டும். பெண்களுக்கு பேதமை ஒன்று இருக்கிறது. பேதமை என்பது மாதர்க் கணிகலம் என்பது பழமொழி. பேதமை என்ற சொல் மடம் என்று பொருள் படும். மடம் என்று சொல்லப்படும் பெருங் குணமானது பெண்களுக்கு ஆபரணமாகும். அதாவது மடம் என்று அறிந்தும் அறியாதோர் போல் இருத்தல் பெண்களின் இக்குணமும் ஆண்களின் தவறுகளுக்கு ஏதுவாக இருக்கிறது.

இறுதியாகவும் சொல்ல விரும்புவது இக்கட்டுரை எந்த ஒரு ஆணையோ, ஆண் வர்க்கத்தையோ குறை கூறுவதற்காக எழுதப்பட்டதன்று. இங்கு நாளாந்தம் காணும் பிரச்சனைகளுக்கு ஓரளவாவது முற்றுப் புள்ளி வைக்க உதவும் என்பது எனது கருத்தாகும்.

முற்றும்.

---

தொடர் இல : 3

## குர்திஸ்தான் விடுதலையும் கவிதையும்

-யமுனா ராஜேந்திரன் ( தமிழாக்கம் )

### *லத்தீப் ஹல்மத் (LATHIF HALMAT)*

1947 ஆம் ஆண்டு தென்குர்திஸ்தானில் பிறந்தவர். சமகால நவீன குர்திஸ் கவிகளில் குறிப்பிடத்தக்கவர். வாழ்நாளில் பெரும்பகுதி பத்திரிகையாளராய் இருந்தவர். ஐந்து கவிதைத்தொகுதிகள் வெளியாகியிருக்கிறது.

### *முடிவுற்ற முடிவுறாத கவிதை*

கற்கள் சந்தோசத்தையோ துக்கத்தையோ
உணர்வதில்லை
அது எவரையும் வெறுப்பதோ நேசிப்பதோ இல்லை
காதலில் ஈடுபடும் இதயமும் இல்லை
காதலர்களுக்கு கடிதங்களோ கவிதைகளோ எழுத
அவற்றுக்கு கைகளுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீதிக்கு வீதிக்கு துரத்தி கற்கள்
காதலுக்கு அலைவதுமில்லை
ராணுவத்தினர் கைது செய்யவரும்போது
கற்களுக்கு ஓடுவதற்கு கால்களுமில்லை

இறந்து விட்டால் அழ அம்மாவுமில்லை
தவறான வழி நடந்தால்
நெறிப்படுத்த அறிவுரைசொல்ல தகப்பனும் இல்லை
அர்ப்பணிப்பதற்காக கற்களுக்கு
குறிப்பிட்ட தேசமும் இல்லை.
எங்கே அவைகள் கிடக்க நேர்கிறதோ
அங்கேயே சாய்ந்திருக்க இடம் பிடிக்கும்
இறுக்கமாக அமர்ந்து விடும்.

கற்கள் கடந்த காலத்தை நினைக்கமுடியாது
நினைவுகளை மீட்கவும் முடியாது முடிந்திருந்தால் அவை
எப்போதேனும் ஒரு கடிதமோ கவிதையோ
எழுதியிலுக்கும்.

நமது மூதாதையர்கள் சொல்லியிருக்கிறார்கள் :
"கற்கள் அவை இருக்கும் இடத்திற்கே பாரம்
மனிதர்களும் அப்படித்தான்"

## நாம் வாழும் காலம்

நாம் வாழும் காலம்
பொக்கையான அலங்கரிக்கப்பட்ட வார்த்தைகளின்
காலம்
போலியான மண்டியிட்டு வாழும் கவிகளின் காலம்
விற்பனைக்குண்டான சிந்தனை மூளை
இதயத்தின் காலம்
சுதந்திர மரணத்தின் காலம்
ஒன்றாகவோ கூட்டாகவோ நாம் சாவதற்காக
மரணம் ஒவ்வொரு தெருமுனைத் திருப்பத்திலும்
காத்திருக்கிறது
கொஞ்சமாக எதிர்பார்த்த இடத்திலும் சாவு
தனது காவலாளாக உனக்கு சேவகம் செய்கிறது
பூர்சுவாக்களுக்கு சேவகம் செய்வதற்காக
ஒவ்வொரு வார்த்தையும்

www.tamilarangam.net

நூற்றுக்கணக்கான தானியங்கி எலக்ரானிக்
சாதுரியங்களில் சிறைப்படுத்தப்பட்ட
வார்த்தைகளின் காலம்
குழப்பங்களின் சிக்கல்களின் காலம்

நல்லது கெட்டதுக்கிடையில் புகுந்து வேறுபாடுகாண
நாம் கற்றுக்கொள்ளவேண்டும்
ஐஸ் கிரீமை விட முடியலாய்காரங்களைவிட
நெக்லஸ்களைவிட முத்தங்களை விட நாம்
உண்மையை நேசிக்கவேண்டும்.

---

ஒரு கதை..........................................................................................

# ஒளியிடைமறைவில்...

**வெண்மையான முகில்மூட்டமும் கருகிப்படியும் இந்த வெள்ளைத் தெருக்களில்..!**
**எம் கருந்தலைகள் தெளிவாகவே தெரிந்து கொள்ளும்...!!**

- **செ.லோகநாதன்.**

வேப்பங்குழை பெருங்கட்டுகளாய், கொத்துக்கொத்தாய் கட்டித்தொங்க விடப்பட்டிருந்தது. தூரத்திலேயே மணக்கத் தொடங்கிய அந்த நெடில் இப்போது அதிகமாகவே மணக்கின்றது. துரையண்ணர் ஆட்டுக் கட்டைக்குள் நின்று அவர் வளர்க்கும் மாப்பிள்ளைக் கிடாய்களைத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தார். இளம் குட்டியொன்று அவரில் இடிபழகிக்கொண்டிருந்தது. அந்தப் பெரிய கிடாய்களில் இரண்டு எனக்கு ஏற்கனவே தெரிந்தவை. பழக்கப்பட்டவை. அவை மொழுமொழுவென்றிருந்தன. அவற்றைக் கண்டவுடன் என்னையும் அறியாமல் அதுகளுடன் மீண்டும் சொந்தங்கொண்டாட வேண்டும் போலிருந்தது. கனகாலமில்லை ஒரு ஒன்பது பத்துமாதங்கள்தான் வரும். அதற்குமுன்னர் இந்த மாப்பிள்ளைக் கிடாய்களிரண்டும் என்மீதுதான் இடிபழகித் திரிந்தவை. சேரன்,சோழன் இந்தப் பெயர்களை வைத்துத்தான் அதுகளை நானும் வீட்டாரும் அன்போடு வளர்த்துவந்தோம். இன்று இந்தச் சேரனும்,சோழனும் ஆட்சிபுரியும் இடத்திற்கு அவற்றின் தாய் மணியையும் கட்டி இழுத்துக்கொண்டு நான் வந்திருக்கின்றேன். தாய்க்கும் குட்டிகளுக்குமிடையில் இருந்த இரத்த உறவு, பாசம் எவையுமே அவற்றுக்கு தெரிந்திருக்கவுமில்லை. அப்படியானதொரு

www.tamilarangam.net

கோட்பாட்டு வாழ்வினையும் அவைகளிடமிருந்து எப்படி நான் எதிர்பார்க்கவும் முடியும். இப்படியொரு வாழ்வு ஆரம்பமனித காலத்தின்போது இருந்ததாகவும் சில ஆய்வாளர்கள் தெரிவித்த கூற்றுக்கள் இப்போது என் நினைவுக்கு வருகின்றது. இந்த நினைவுகள் கூட எங்கள் புலம் பெயர்வுகளுடன் சமச்சீரற்றுப் போச்சு.

இப்படி மொழுமொழுப்பான கிடாயொன்றைத் தேடிக்கொண்டு லாஸிடம் சென்றபோது, லாஸின் நாயே முன்நின்று எம்மை வரவேற்றது. இப்படி ஆடு வெட்டுவது இந்த டென்மார்க்கின் சட்டப்படியும் குற்றமானதுதான். நாம் எப்போதுதான் இப்படியான சட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்திருக்கிறோம். இந்த நாட்டுக்காரன் லாஸ் வெட்டி விற்கும்போது எமெக்கென்ன. இன்று எனக்காக ஆட்டைக் கொலை செய்விக்க நான் வரவில்லை. எனது நண்பரின் தேவையை பூர்த்தி செய்வதேயாகும். அவரும் மனைவியும் சேர்ந்தே வந்திருந்தனர். நண்பரின் மனைவி சாடையாக மசுகிமசுகி ஏதோ சொல்ல முற்பட்டபோது நானே ஒரு நட்புணர்வுடன், நண்பர் குடும்பத்தினருக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற விருப்பத்தில் என்ன சொல்லுங்கோ என்றதுதான்..., எனக்கு சீ என்றாகிவிட்டது. நீங்களே லாஸைக் கேளுங்கோ என்றேன். அவர்களும் கேட்டுவிட்டார்கள். நான் வெளியே போய்விட்டேன். லாஸ் என்னைக் கூப்பிட்டான். நீயேன் இந்தக்குளிருக்கை வெளியே போகின்றாய்? எனக்குத் தெரியும் தமிழர் குடல், தலையெல்லாம் சாப்பிடுவார்களென்று.! நான் முன்பே சிலர் கேட்டு அப்படிக் கொடுத்திருக்கிறேன். நீங்கள் கொம்பு.. தோல்.. குரை.. இவற்றையும் சாப்பிடுவீர்களா? வெட்கப்படாமல் சொல்லுங்கோ அப்பிடிச் சாப்பிடுவீர்களென்றால் எனக்கும் இந்த கழிவகற்றக் கொடுக்கும் காசிலும் கொஞ்சமாவது மிஞ்சும்.

அந்த மொழுமொழுப்பான கறுத்த ஆட்டினை லாஸ் தனது கால்களின் இடுக்கினுள் பிடித்துக்கொண்டு தயாராயிருந்த அந்த சிறு துவக்கினால் ஆட்டின் தலையில்.......!


இந்த நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருக்கும் போதே, தொழிற்சாலை வேலைகளும் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. தொலைபேசி அழைப்பதாக பிறியன் வந்து சொன்னான். நான் அவனைப் பார்த்தேன். அவன் சிரித்துச் சென்றான். காரியாலையத்துள் சென்று தொலைபேசியை எடுத்ததும் எனக்கு வாணிமீது கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவள் எனது துணைவி, இருந்தாலும் நான் வேலைக்கு வந்து இரண்டு மணித்தியாலங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் ஏன் இப்போது தொலைபேசி?

நான் எதிர்பார்த்ததை விட அவள் அவசரமாகத் தொடர்ந்தாள். வைத்தியரின் காரியாலய தொலைபேசியிலிருந்து கதைப்பதால் தன்னால் அதிகம் கதைக்க முடியாது என்றும் சொன்னாள். வாணி சின்னவளையும் வைத்துக்கொண்டு திண்டாடிக் கொண்டிருப்பதும் எனக்குப் புரிந்தது. என்னை உடன் வரும்படி கூறியபோது என்னிதையம் என்னையுமறியாது வேகமாய்த் துடித்தது.

விதுனுக்கு இது சாதாரண சுகவீனமில்லை. இந்த முடிவை நான் மனதுள் எடுத்துக்கொண்டேன். விதுன் மூன்று நாட்களாக தனது உள்ளாடை நனைவது கூடத் தெரியாத நிலையில் அவன் சலம் போக்கிக் கொண்டிருந்தான். அத்துடன் மத்தளம்போல் இருமிக்கொண்டும், காதுள் நோகுதென்பான். அன்று இரவாய்

இருந்ததால், நாம் விசேட வைத்தியருடன் தொடர்புகொண்டும், எமக்குத் தெரிந்த கைவைத்திய முறைகளையும் செய்துவைத்தோம்.

இந்த நேரம் போக்குவரத்து வசதியுமில்லை, கையிற் காசுமில்லை. ராக்சி பிடித்துப் போவதென்றாலும் அதிகமான காசு. எனது நண்பனுக்கு என் பிரச்சனையை சொல்லியாகவேண்டும். அவனிடந்தான் பண உதவியும் கேட்க வேண்டும். இந்த தொலைபேசி வந்ததிலிருந்து ஆறெழுந்து மடையெடுத்துக் கல்லரித்து திசை தெரியாது ஓடுவதுபோல், என் மனதுள் ஏதேதோ பொங்கி எழுந்து கொண்டிருக்கின்றது. குழந்தைபற்றிய எண்ணங்கள் இப்படித்தான் இருக்குமோ....!



தயா தன்பாட்டில் பேசிக்கொண்டிருந்தான். எனக்கோ ஏதும் புரிந்தபாடில்லை. இவன் அடிக்கடி இப்படித்தான். நல்லவன் ஆனால் மூலக்கொதியன். அவனிடம் எனது பிரச்சனைகளை சொல்வதற்கு முன், அவனே என்னுடன் பேசத் தொடங்கினான். அவன் பேசி முடிக்கும்வரை நான் காத்துக்கொண்டிருந்தேன். அவன் பேசிக்கொண்டேயிருந்தான். நான் கேட்டுக்கொண்டேயிருந்தேன். அவன் சொன்ன தொழிற்சாலை பற்றிய பிரச்சனைகளில் எனக்கும் பங்குண்டு. அவன் மட்டுமல்ல நானும் அவற்றால் பாதிக்கப்பட்டிருந்தேன்.

விதுனின் சுகவீன நிலைபற்றி தாயாவுக்குச் சொல்லி முடித்தேன். தயாவும் விதுனின் நிலைபற்றி ஓரளவாவது முன்பே தெரிந்திருந்தான். அவனும் தன்னால் முடிந்த உதியினைத் தந்தான். உடனடியாகச் செல்லும்படி பணிப்பாகச் சொன்னான்...

www.tamilarangam.net

எமது பொறுப்பதிகாரியிடம் எனது நிலையினைச் சொன்னபோது, ஏதும் கூறாது விழிபிதுங்கினான்..., சற்று சுதாகரித்துக் கொண்டு ஏதோ சொல்ல முயன்றான்..., இதொரு பெரிய பிரச்சனைதான். திடீரென்று நீ இப்படிச் சொல்லும்போது தன்னால் என்ன செய்வதென்றே புரியவில்லையென்றான். சரி நீ போ, என்றதுடன் எப்படிப் போகப்போகின்றாய்...? என்றும் கேட்டான். நானேதும் பேசாது நின்றேன். அவன் தொடர்ந்தான்....! பொது வாகனவசதி ஏதும் இந்நேரம் இருக்காது. குவாட்டிடம் உன்னை தொழிற்சாலை வாகனத்தில் கொண்டுபோய் விடச் சொல்கிறேன்..., நாளைக்கு வேலைக்கு வருவாய்தானே என்றான். முடியாதுவிடின் மறவாது தகவல் தரவேண்டும் என்றான். நான் இப்போதும் கோவில் மாடுபோல் ஆமாப் போட்டபடி தலையாட்டிக் கொண்டிருந்தேன். இந்த நாடகம் ஒருவாறு முடிந்தது. வைத்தியரிடம் வந்து சேர்ந்தேன்.

வாணியின் தோளில் விதுன் சுருண்டு படுத்திருந்தான். வாணி அந்த இருக்கைக்குள் இறுகிப்போயிருந்தாள். சின்னவள் சினந்து அழுதவண்ணம், அவளுக்குப் பெரிதாய்த் தெரியும், தனது கைப்பெருவிரலை வாயாற் சுவைத்துக்கொண்டிருந்தாள். விதுனுக்கு உதவுவதா.... சின்னவளைத் தூக்கி பசி போக்க உதவுவதா.... வாணிக்கு ஆறுதல் கொடுக்க என்னால் எதைச் செய்வதென்று புரியாது ஒருகணம் தளர்ந்து நின்றேன். சுதாகரித்துக்கொண்டு விதுனை வாணியிடமிருந்து எனது தோளுக்கு மாற்றினேன். சின்னவளுக்கும் பசியாறியது. வாணிக்கும் சிறிதாவது சுமை குறைந்திருக்க வேண்டும்.

என்னையும் விதுனையும் சுமந்துகொண்டு விசேட வைத்திய வாகனம், குழந்தைகள் மருத்துவ மனைக்கு வந்து சேர்ந்தது. வைத்தியர்கள் சிலர் விதுனை பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் ஏதோ கதைக்கிறார்கள். எனக்கென்றால் ஒன்றுமே புரியவில்லை. இப்படியே இந்தப் பகல் கருகியது.

விதுன் இரவு பகலாய் இருமியிருமி களைத்துச் சோர்ந்து அள முடியாமல் முக்கி முனகிக் கொண்டிருந்தான். என்னால் அவனைப் பார்க்க முடியாமல், அவனுக்கு ஆறுதல் தர முடியாமல் என்னுள்ளே விம்மிப் பொருமிக் கொண்டிருக்கிறேன்.

வெள்ளைத் துணி உடுத்திய தாதிகளும், வைத்தியர்களும் வந்து விதுனைப் பார்த்துவிட்டு, எனக்கும் ஆறுதல் சொல்லிக் கொண்டார்கள். விதுனுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென முன்பே தெரிவித்திருந்தார்கள். அதனால் எனக்கும் வெள்ளை அங்கி உடுத்தப்பட்டது. தலைக்கும் காலுக்கும் பச்சை. விதுனுக்கும் உடைகள் வெள்ளையாயின. இரவு **12$^{00}$** மணியிலிருந்து விதுன் எதையுமே உண்ணக் கூடாது, குடிக்கக் கூடாது என்ற கட்டளையினை தாதிகள் எனக்குப் பிறப்பித்திருந்ததால், அவனுக்கு தாகமாயும், பசியாயும் இருக்குமென நினைத்த எனக்கும், எதையும் உண்ணக் குடிக்க வெறுத்துப் போனது. சில இரவு பகல்களை இடை விட்டாவது முழுமையாக என்னால் பார்க்க வேண்டியிருந்தது.

ஒரு தாதி என்னையும், விதுனைக் கட்டிலோடும், தூரத்தே அழைத்துச் சென்று பச்சை உடுத்திய தாதிகளிடம் ஒப்படைத்துப் போகின்றாள். அந்தத் தாதிகள் எங்களை சத்திர சிகிச்சைக் கூடத்துள்ளே அழைத்துச் செல்கின்றார்கள். பெயர்கள் இலக்கங்கள் சரிபார்க்கப் படுகின்றன. விதுனை கூடத்தின் நடுவே இருந்த

www.tamilarangam.net

விசேடமான அந்தக் கட்டிலில் தூக்கிப் படுத்துகின்றார்கள். நான் பார்த்துக்கொண்டு நிற்கின்றேன். விதுனின் இடது கையில் இரத்தம் எடுக்க முயற்சித்து தோற்றுப்போய், இப்போது வலது கையில் ஊசியாற் குத்தி இரத்த நாடி தேடுகின்றார்கள். இடது கையில் ஊசி குத்திய இடத்தால் இரத்தம் வளிந்து சிந்துகின்றது. அதற்கு பஞ்சு போர்த்தி மறைக்கின்றார்கள். வலது கையில் குத்தியபோதும் அவர்களுக்குத் தோல்விதான். விதுனின் திணறலை அவர்களாலும், ஏன் என்னாலும் கூட அடக்க முடியவில்லை. இப்போது அந்த கறுத்த இறப்பர்க் கவசத்தினை அவனது வாயையும், மூக்கையும் மூடி மெதுவாய் அழுத்தியபடி, மயக்கவாயுக் கலசத்தின் திருகையினை திருகியவாறே மந்திரம் முணுமுணுப்பது போல் எண்ணிக் கொண்டிருந்தவள், உனது மகனுக்கு "god nat" சொல் என்கிறாள். எனக்கு இதயத்துள் திகீர் என்றது. எனது மனக் கண் முன்னால் ஆடு கொல்லும் லாசும், ஒரு மொழுமொழுப்பான கறுத்த ஆடும் வந்து நின்றது...!

லாஸ் அந்தக் கறுத்த ஆட்டினை தனது கால்களின் இடையில் இடுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். கையில் அந்தச் சிறிய துப்பாக்கி சுடுவதற்கு தயாராய் இருந்தது. "god nat" நன்றாகத் தூங்கு என்கிறான்...! அவ்வளவுதான். அந்தச் சிறிய துப்பாக்கி லாஸின் பணிப்பினை ஏற்று ஆட்டின் தலையுள் குண்டினைத் திணித்த பின்பே சற்று ஓய்வெடுத்தது. ஆட்டின் தலையிலிருந்து இரத்தம் சீறிப் பாய்ந்து, அடங்கிப்போய் கருமையாகிக் கழிவோடையில் கலந்து போனது. அந்த ஆடு இனி மீண்டு வராது. அதன் இறுதித் துயில் ஒரு வெடியுள் மாண்டு போனது.

இந் நினைவு எனக்குப் பெரும் மரணப் பயத்தினை தந்தது. விதுன் திமிறித் திமிறி சற்று சோர்ந்துபோய் பின்பு கண்களை மூடிக்கொண்டான். அவனது சகல அங்கங்களும் அசையாதிருப்பது போல் எனக்குப் பட்டது. அவனைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடவேண்டும் போலிருந்தது. தாதிகள் என்னை வெளியே நிறுத்தி உள்ளே போயினர். அவன் வெளியே அவனாய் வரும்வரை... நான் அவனாய் மாறி..!எனக்கு மன நிலை மாறுவது போன்ற உணர்வு தெரிகிறது.

என் இரத்த உறவுகளுடன் நான் சிரித்து மகிழ்ந்து கொண்டிருப்பது தெரிகிறது. என் நண்பர்களும் எனக்கு ஆதரவாய் இருப்பதும் தெரிகிறது. நாம் எதையுமே கேளாதிருந்தும், அந்த தேனீர்க் கடை மணியண்ணர் வைத்திய சாலைக்குள் தானே வந்து விதுனின் சுக நிலைகேட்டு, ஆறுதல் சொல்லி எங்கள் எல்லோருக்கும் இலவச தேனீரும் தந்து போகின்றார். நான் விதுனை விட்டு சற்று விலகி நின்று நண்பர்களுடன் கதை அளக்கிறேன். விதுனுக்கு உதவியாக பலர் நிற்கிறார்கள்..! எனது அம்மா விதுனுக்கு உணவு ஊட்டிய வண்ணம், அவனை இந்தச் சமூகத்திற்கு என்றும் நல்லது செய்யும் சேவகனாக வளர்ந்து வரவேண்டுமென்று குட்டிக் கதைகளும் சொல்கின்றார். எனக்கு அதன் தார்ப்பரியம் புரிந்தும் புரியாதிருந்தது.

என்னைச் சுற்றி தாதிகளும், வைத்தியரும் நின்று எழுந்திரு கதை என்கிறார்கள். எனதருகில் விதுன். அந்தக் கறுத்த ஆடு வெடி வாங்கி விழுந்திருப்பதைப் போல் மூக்கினால் இரத்தம் பொசிந்தபடி முனகிக்கொண்டு படுத்திருக்கிறான். என் பார்வைக்கு அவன் மயங்கிய நிலையில்..!.

*(முற்றும் - ஆயினும் இந்நிலை தொடரும்.)*

www.tamilarangam.net

# பாசிச எதிர்ப்புத் திரைப் படங்கள்...

-ரி.சௌந்தர்.

## சின்ட்லர் லிஸ்ட் ( SCHINDLER LIST )



சின்லரும், அமன் கோத்தும்

நாஜிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து ஐரோப்பா விடுதலையடைந்த 50வது வருட நினைவு ஐரோப்பா வெங்கும் சென்ற வருடம் நினைவு கூரப்பட்டது. நாஜிசம், பாசிச கொடுமைகள் பற்றி செய்தி ஊடகங்களில் அதிகமாகவும் பேசப்பட்டு வருகின்றது. ஆயினும் இவ்விடயம் சினிமாவிலும் ஆங்காங்கே வெளிக் காட்டப்பட்டது. 1990களில் அங்கொன்றும், இங்கொன்றுமாய் நாஜிசம், பாசிசம் பற்றி சித்தரிக்கும் படங்கள் வெளிவந்தன.

உலகின் பல பாகங்களில் பாசிச சக்திகள் அரசியலில் குறிப்பிடத் தக்களவு ஆதிக்கத்தை காட்டத் தொடங்கியுள்ளன. 50 வருடங்கள் கழிந்த பின்னும் இச் சக்திகளின் வளர்ச்சி பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகிறது. உதாரணங்களாக இத்தாலியில் பெருஸ்லோகோனியின் கட்சியின் பாசிச கட்சியுடனான முன்னனி, இந்தியாவில் இந்து முன்னணி, ரஷியாவில் ஜிரினோவ்ஸ்கி, ஜேர்மனியில் நாஜிகள், பிரிட்டனில் தேசியக்கட்சி (நாஜி), பிரான்ஸில் லீபென், ஸ்பெயினில் ராணுவ கொடுங்கோலன் பிராங் கோவின் ஆதரவாளர்கள், அமெரிக்காவில் (KLAN) அமைப்பினர், தென் ஆபிரிக்காவில் நாஜிகள் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

ஐரோப்பிய நாடுகளில் நாஜிச, பாசிசத்தின் வளர்ச்சி 50 வருடங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்கு முன் யூதர்கள் நாஜிகளின் சித்திரவதை முகாம்களில் கொல்லப்பட வில்லை என்று கூறுமளவிற்கு வளர்ந்துவிட்டனர். இவர்கள் இதனை 'AUSWITZ (பொய்கள்)' பொய்கள் என்ற தலைப்பில் நூல்களும் வெளி யிட்டு வருகின்றனர். எனினும் இவர்களின் இந்த வரலாற்றுத் திரிப்பை உயிர்தப்பிய பலரும், நாஜி எதிர்ப்பாளர்களும், கம்யூனிஸ்டுகளும் தோலுரித்து வருகின்றனர்.

இத்தாலியின் மூத்த பிரபல திரைப்பட இயக்குநர் ஒருவர் ' மொசோலினியின் காலத்தில் சட்டம், ஒழுங்கு, நீதி எல்லாம் பாராட்டத்தக்கதாக இருந்தது ' என்று கூறி சில வருடங்களுக்கு முன்பு எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார். அவர் 'இத்தாலியின் கலாச்சாரச் சின்னம்' எனப் போற்றப்பட்டவர். அரசியல்வாதிகள் "இப்படிப்பட்டவர்களே இப்படிக் கூறினால் இக்கால இளைஞர்கள் நம்பிவிடுவார்களே....!" என அங்கலாத் தார்கள்.

இப்படி உலக நிலமைகள் இருக்கும் போது நாஜிசம், பாசிசக் கொடுமைகள் பற்றிய படங்கள் வெளிவருவது வரவேற்கத்தக்கதே. சென்ற சில ஆண்டுகளில் நான் பார்த்த இந்த வகைப்படங்கள் பற்றி எழுதுவதே எனது நோக்கம்.

அந்த வகையில் 1994ம் ஆண்டு வெளிவந்த **SCHINDLER'S LIST** என்ற படம் ஆரம்பமாக அமைகிறது. இத் திரைப்படம் டென்மார்க் விடுதலையடைந்ததை முன்னிட்டு 1995ம் ஆண்டும் மீள திரையிடப் பட்டது.

THOMAS KENEALLY என்ற அவுஸ்திரேலிய எழுத்தாளர் எழுதிய 'SCHINDLER'S ARK' என்ற நாவலைத் தழுவி இப்படம் எடுக்கப் பட்டுள்ளது. இது அமெரிக்காவின் புகழ்பெற்ற திரைப்பட இயக்குனரான STEVEN SPIELBERG ன் இயக்கத்தில் உருவானது.

OSCAR SCHINDLER என்ற ஜேர்மனியர் நாஜிகளின் சித்திரவதை முகாம் ஒன்றிலிருந்து 1200 யூதக்கைதிகளை காப்பாற்றியதை மையமாக வைத்து பின்னப்பட்ட கதை. OSCAR SCHINDLER செக்கோஸ்லவாக் கியாவில் ஜேர்மன் தேசியவாதிகளான பெற்றோருக்கு மகனாக 1908ம் ஆண்டு பிறந்தவர். பரம்பரைத் தொழிலான வியாபாரம் வெற்றியளிக்காததால் வேறுபல தொழில்களும் ஆரம்பித்துத் தோற்றவர். நாஜிகள் ஆட்சியை ஆக்கிரமித்துக் கைப்பற்றிய பின் அவர்கள் உருவாக்கிய சித்திரவதை முகாம்களில் ஒன்றான




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

KRAKOW என்ற இடத்திலுள்ள முகாமிற்கு வருகிறார்.

1940களில் நாஜிகளின் முகாம்களில் 10 மில்லியன் பேர்கள் கட்டா யப்படுத்தி வேலை வாங்கப்பட்டனர். இது நாஜிகளின் திட்டமிட்ட, மிகப் பெரிய லாபந்தரும் முதலீடாகவும் அமைந்தது. முகாம்களில் கடுமையாக வேலை வாங்கப்பட்டு நலிந்தவர்களை விஷம் அடித்து கொன்றொழித்தனர். இவர்களை கடுமையாக சுரண்ட பல கம்பனிகள் அனுமதிக் கப்பட்டன. இக்கம்பனிகள் கைதிகளுக்கு மாற்றீடாக ஏதும் செய்தது கிடையாது. இந்தப் பொருளாதார முதலீடு யூதர்களின் பசி, பயங்கரம், மரணத்தினூடே நடாத் தப்பட்டது.



STEVEN SPEILBERG

இப்படிப்பட்ட முகாம்களிலுள்ள யூதர்களிடம் இலவசமாக வேலை வாங்கி விரைவில் பணம் பண்ணும் நோக்கத்தோடும் KRAROW நகரில் வாழ்ந்த செல்வந்த யூதர்களின் வீடுகளையும், தொழிற்சாலைகளையும் அபகரிக்கும் நோக் கத்தோடும் வந்து அவற்றை அடைந்து கொள்கிறான்.

படம் சமயச் சூழலை பின்னணியாகக் கொண்டு ஆரம்பிக்கிறது. பூஜை விளக்குகள், ஆழ்ந்த யோசனையுடைய முகங்கள் காட்டப்படு கின்றன. பூஜை விளக்கின் ஒளி அணைந்து யூதர்களை ஏற்றிவரும் ரயில் புகையாகக் காட்சி மாறுகின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் கெடோக் களில் (GHETTO) அடைக்கப்படுகின்றனர். செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த யூதர்கள், சாதாரண யூதர்களுடன் பழைய கட்டிடங்களில் தள்ளப்படு கின்றனர்.

செல்வந்த யூத வீடொன்றில் நுழைந்து எவ்வித கூச்சமும் இல்லாமல் படுக்கை அறையில் உள்ள மெத்தையில் சப்பாத்துக் கால் களுடன் ஒய்யாரமாகப் படுத்துக் கொண்டு "இதை விட நன்றாக இருக்க

www.tamilarangam.net

முடியாது... " என்று SCHINDLER கூறுவது ஆணவத்தின் உச்சம். பண ஆசை பிடித்த யூதர்களை தனது திட்டத்திற்கு முதலீடு செய்யும்படி வற்புறுத்துவது, கறுப்புச் சந்தையில் பொருள் வாங்குவது போன்ற காட்சி களில் சின்டலரின் பணவெறி கூறப்படுகிறது. தான் ஆரம்பிக்கப் போகும் அலுமினிய கம்பனிக்குத் தகுதியான திறமை வாய்ந்த யூதர்களை தெரிவு செய்யும் முறையும் வினோதமானதாகவே உள்ளது. அதற்காகவே நாஜி அதிகாரிகளை லஞ்சம் கொடுத்து இணங்க வைக்கிறான் SCHINDLER. தங்களுக்கு நிகழப்போகும் பேரபாயத்தைப் புரிந்து கொண்ட யூதர்கள் சிலர் தாமாகவே சின்டலரின் திட்டத்திற்கு இணங்குகிறார்கள். அலுமினியக் கம்பனியின் கணக்காளராக நியமிக்கப்பட்ட STERN இதற்கு தலைமை தாங்குகிறார். STERN என்ற பாத்திரத்தை ஏற்று நடித்திருப்பவர் BEN KINGSLEY ஆவார். இவர் காந்தி படத்தில் காந்தியாக நடித்து மிகப் புகழ் பெற்றவர்.

மூன்றரை மணி நேரம் கறுப்பு வெள்ளையில் ஓடும் இப்படத்தின் காட்சிகள் பல இடங்களில் நிஜமான காட்சிகள் என்று எண்ணத் தூண்டு மளவிற்கு இயற்கையாக அமைந்துள்ளது. மிகச்சில காட்சிகள் கலரிலும் பதிவ செய்யப்பட்டுள்ளது. ஒளிப்பதிவும், படத் தொகுப்பும் நிறைய கை கொடுத்துள்ளது. கைக்கமராவின் மூலம் சில காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளமை நம்மைக் கதை நடக்கும் இடத்தில் நிற்கும் உணர் வைத் தருவதுடன், அதிர்ச்சி தருவதாகவும் உள்ளன. குறிப்பாக நாஜிப் படை யூதர்களை வேட்டையாடும் காட்சிகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். சில காட்சிகள் மிகவும் கொடூரம் நிறைந்தவை. இவை தேவை தானா என்ற கேள்வி உண்மையில் நாஜிகள் செய்த கொடூரங்களை எண்ணிப் பார்க்கும் போது, இப்படிக் காட்டுவதில் தவறில்லை என்ற முடிவிற்கு வரவைத்து விடுகிறது. இக் கொடுமைகளுக்கு (AMEN GOTH) அமன் கோத் என்பவன் தலைமை தாங்குகிறான்.

KRAKOW பகுதியில் PLASZOW சித்திரவதை முகாமின் அதிகாரி யாக அமன்கோத் விளங்குகிறான். இவனின் கொடுமைகள் நம்மை நடுங்க வைக்கிறது. தனது வீட்டு மாடியில் இருந்து கொண்டு, கீழே நடந்து செல்லும், வேலை பார்க்கும் யூதர்களை பொழுது போக்காகச் சுடுகிறான். சிறிய ஒரு தவறு செய்யும் யூதரை தனது சவுக்கால் அடிப்பதும்,இடையே நிறுத்தி எத்தனை முறை அடிவிழுந்தது என கேட்பதும், அப்படி அவர்கள் கூறாவிட்டால் மீண்டும் ஞாபகம் வரும் வரை அடிக்கும் கொடுங்கோலன்.

AMEN GOTH பாத்திரம் மிகவும் உணர்ச்சிக் குழப்பமுடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாத்திரம். சித்தசுவாதீனம் இழந்த ஒரு இனவெறியன். ஆயினும் ஒரு அழகிய யூதப் பெண் மீது காதல் கொண்டு அவளை தனது வீட்டுச் சேவைக்கென அமர்த்துகிறான். தனது காதலை வெளிப்படுத்த முடியாமல் திணறுகிறான். நாஜிகளின் கோட்பாட்டின் படி யூதர்களுடன் 'இனக்கலப்பு' செய்வது (ஜேர்மனியர்+யூதர் திருமணம்) கடுமையான குற்றமாகும். அது நாஜிகளின் உத்தியோக பூர்வமான கொள்கையாகவும் இருந்தது.


அமன் கோத் நிஜ உருவம்

இவ்வினவாதக் கொள்கையைக் கடைப் பிடிக்கும் நாஜி அதிகாரி ஒருவன் ஒரு யூதப் பெண்ணிடம் மயங்கு கிறான். அவளைப் பார்க் கும் போதெல்லாம் " நான் ஒரு ஜேர்மனியன்! போயும் போயும் ஒரு யூதப் பெண்ணை விரும்பு வதா?" என்பதும் மீண்டும் "இந்த முகத்தையா எலிகளின் மூஞ்சை என்கிறார்கள் " என மனதுக்குள் தத்தளிப்பதும் குழப்பத்தின் உச்சம், சற்றுப் பின் ஆத்திரப் பொங்க அப்பெண்ணை அடித்து நொருக்குகிறான். இந்தப் பாத்திரத்தில நடித்த இங்கிலாந்தைச் சேர்ந்த ரால்ப் பைன்ஸ் என்ற நடிகர் பாராட்டத்தக்கவர்.

ஆரம்பத்தில் பணத்தை மாத்திரம் முக்கியமாக் கருதி செயல்படும் சின்டலர் படிப்படியாக யூதர்கள் மீது நடாத்தப்படும் கொடுமைகளை உணர்கிறான். அமன் கோத் மற்றும் நாஜி அதிகாரிகளுக்குப் பெருமளவில் லஞ்சம் கொடுத்து தனது தொழிற்சாலையில் வேலை பார்க்கும் யூதர்க ளைக் காப்பாற்றுகின்றார். யூதர்கள் மீது அனுதாபமும் கொள்கிறார். சின்லரின் பிறந்த நாள் விழாவில் யூதச் சிறுமியை முத்தமிட்ட காரணத்திற்காக நாஜிகளால் சிறையில் தள்ளப்படுகிறார்.

இந்த சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் ரஷ்யாவின் செம்படை போரில் மேற்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக் கிறது. நாஜிகளின் மீதான போரில் கணிசமான வெற்றிகளைத் தம்வசம் கொண்டு செம்படை முன்னேறுகிறது. இதனால் போலந்தில் உள்ள முகாம் களை நாஜிகள் இடம் பெயர வைக்க வேண்டி நேரிடுகிறது. படத்தில் இடம் பெயர்ச்சிக்கான காரணம் சொல்லப்படாமல் விடப்பட்டுள்ளது. மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யூதக் கைதிகளை அடிமைகளாகப் பயன்படுத்திய கம்பனிகளில் ஒன்றான I.G.FARBEN பற்றி படத்தில் கூறப்படுகிறது. இன்று அக்கம்பனி இல்லை. ஆனால் இன்றுமுள்ள கம்பனிகளான SIEMENS, BASF, AFGA போன்றவைகளும் யூதர்களை அடிமைகளாகப் பயன்படுத்தி லாப மடைந்தன. இவை பற்றி மூச்சே விடவில்லை டைரக்டர் (ஸ்பீல்பேர்க்) இவை ஏகபோக முதலாளிகள் உருவாக்கிய உலகப் போரை மறைப்ப தாகும். BAYER என்ற மருந்து உற்பத்தி செய்யும் கம்பனிகள் பரிசோதனைக்கென யூதர்களை விலை கொடுத்து வாங்கியது. இன்று வரை இக் கம்பனிகள் ஒன்று கூட நட்ட ஈடு வழங்கியது கிடையாது. BAYER என்ற கம்பனி இன்று வரை மருந்து உற்பத்தியில் குறிப்பிடத் தக்க அளவு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இக்கம்பனிகள் பற்றியும் படத்தில் குறிப்பெதுவுமில்லை.

PREMO LEVI என்ற யூதக்கைதி, தமது உயிர் "கொடிய கனவுகளாலும், மீள முடியாத துயரத்திலும் மூழ்கடிக்கப்பட்டும், பல லட்சம் மக்களைப் பலி கொடுக்கப்பட்டுமே காப்பாற்றப்பட்டது" என்று எழுதினார். ஆனால் ஸ்பீல்பேர்க்கு நாஜிகளின் உலகப்போர் முக்கியமாக தெரியவில்லை. படத்தின் இறுதிக் காட்சியில் மாத்திரம் "உங்களுக்கு சோவியத் செம்படை விடுதலையளித்துள்ளது" என கூறப்படுகிறது.



யூதக்கைதிகளின் இடம் பெயர்வு - படக் காட்சி.

www.tamilarangam.net

சின்ட்லரின் உதவியால் உயிர்பிழைத்த யூதர்கள் அவருக்கு நன்றிக் கடனாக தமது பற்களில் அடைத்து வைக்கப்பட்ட பவுணினால் ஒரு மோதிரம் பரிசளிக்கிறார்கள். அது சின்ட்லரை மெய்சிலிர்க்க வைக்கிறது. சின்ட்லராக நடித்துள்ள LIAM NESON அந்தப் பாத்திரத்திரமாகவே மாறி நடித்து பாராட்டுப் பெற்றுள்ளார். படத்தின் இறுதி முடிவு ஹொலிவூட் பாணியில் முடிகிறது. சின்ட்லர் தனது மனைவியுடன் காரில் செல்கிறார். சின்ட்லர் காப்பாற்றிய யூதர்கள் கைகள் கோர்த்த வண்ணம் அஞ்சலி செய்வது கலரில் படமாக்கப்பட்டுள்ளது. அவரின் விருப்பப்படி அவரது உடல் இஸ்ரேலில் உள்ள YAD VASHEM என்ற இடத்தில் தகனம் செய்யப்பட்டது.

## ஒஸ்கார் சின்ட்லர் *(OSKAR SHINDLER 1908-1974)* சில குறிப்புக்கள்.

1945ம் ஆண்டு 2ம் உலகப்போர் முடிந்ததும் சின்ட்லர் அமெரிக்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதியில் விசாரணை செய்யப்பட்டார். நாஜிகளின் சித்திரவதை முகாம்களில் KRAKOW வில் மாத்திரமே 1200 யூதர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டது என்பதால் விடுதலை செய்யப்பட்டார்.

1949ம் ஆண்டு தனது மனைவியுடன் ஆர்ஜன்டீனாவிற்குச் சென் றார். 1956ம் ஆண்டு மீண்டும் ஜேர்மனி திரும்பினார். இறுதிவரை பெண் பித்தராகவும், குடிகாரராகவும் விளங்கினார். (இது இப்படத்திலும் கூறப்படுகிறது.) குடியைத் தனது இறுதி மூச்சுவரை நிறுத்தியதே இல்லை. குடிக்காக யூதர்கள் ஞாபகமாக வழங்கிய மோதிரத்தை விற் றார். "நான் குடிப்பதற்காக அதனைப் பாவித்தேன்" என தனது இறுதிப் பேட்டியில் (1974 பிராங்பேட்டில்) கூறி னார். 1974ம் ஆண்டு தனது 66வது வயதில் சின்ட்லர் இறந்தார்.

ஸ்ரேன், சின்ட்லர், சின்ட்லரின் மனைவி



படத்தின் பெரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதி ஒளிப்பதிவு KRAKOW வில் நடாத்தப் பட்டது. அமன் கோத் வாழ்ந்த மாளிகையிலேயே அவன் சம்பந்தப்பட்ட காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது வீடியோ கடைகளில் இப்படம் கிடைக்கிறது. நாஜிகள் பற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்கள் கண்டிப்பாக பார்க்க வேண்டிய படம் என்பது எனது கருத்தாகும். இப்படத்தின் மூலம் ஹொலிவூட்டின் சிறந்த டைரக்டர்களில் ஒருவரான ஸ்ரீபன் ஸ்பீல்பர்க் ஒஸ்கார் விருது களைப் பெற்றுக் கொண்டார். யூதர்கள் பற்றி எழுதப்பட்ட திரைப் படங்களில் சிறந்தது எனவும் பேசப்படுகிறது.

கைப்பையும், சில உடுப்புகளும், ஒரு போர்வையும் இருந்தால் உயிர் வாழப் போதுமானதாக இருந்தது என KRAKOW வில் நிலத்தடி சாக்கடையில் ஒளிந்து உயிர் தப்பிய JANINA என்ற யூதப் பெண்மணி கூறினார். இந்த நிலைமை இன்றைய இலங்கையின் வடகிழக்கு தமிழ் மக்களுக்கும் பொருந்துமல்லவா.

(23ம் பக்கத் தொடர்ச்சி)

2. விந்திற்கும் கறுப்பர்களுக்கும் என்ன ஒற்றுமை.....?
எத்தனையோ மில்லியன் கணக்கிலான விந்து உற்பத்தியில் ஒரு விந்து தான் ஒரு உயிரை உற்பத்தி செய்கின்றது. அதே போல் எத்ததையோ மில் லியன் கறுப்பினத்தவர்களில் எங்கே ஒருத்தன் தான் முன்னேறுகின்றான், அல்லது ஒருத்தன் தான் கெட்டிக்காரனாய் இருக்கின்றான்.

3. முதலாம் வகுப்பில் தங்கள் பிள்ளைகளைப் பார்க்க எல்லாப் பெற்றோரும் வந்திருக்கின்றார்கள். உடனே ஆசிரியர் lille Lars சைப் பார்த்துப் is க்கு எழுத்துக் கூட்டும் படி கேட்கின்றார். உடனே Lars எழுந்து is என்று மிகவும் இலகுவாக எழுத்துக் கூட்டினான். பின்னர் ஆசிரியர் lille Ali யை ப்பார்த்து Racediskriminasion க்கு எழுத்துக் கூட்டு பார்க்கலாம் என்று கேட்க lille Ali எழும்பி முழிசிக் கொண்டு நிற்கிறான்.

–முற்றும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விளைவுகள்

இந்தப் பூமியின்
மண்மீது தான்
எல்லாப் பூக்களும்
மலர்கின்றன.

இந்தப் பூமியின்
மண்ணூடு தான்
எல்லாத்தாதுக்களும்
அணுவாய்
விளைகின்றன.

இந்த மலர்வுக்கும்
விளைவுக்கும் இடையில்
எங்கள் உயிர்ப்பும்
உதிர்ப்பும் நிகழ்ந்து போகின்றன
உதிர்ப்பின் போது
மலர் போத்தும்.

எமை அழிக்க
அணுவையும்
ஆயுதங்களையும்
விளைந்து கொடுக்கும்
பூமியும் எங்களதுதே !
வெறுக்கோம் நாம்

-விதுன்.

www.tamilarangam.net

## சஞ்சீவி ஆறு மலர்களுக்கான சந்தா விபரம் :

| | |
|---|---|
| DENMARK<br>NORWAY<br>SWEEDAN<br>FINLAND | 125 kr. |
| EUROPA<br>AUSTRALIA<br>CANADA<br>USA | 25 U$ |

(அஞ்சற் செலவு உட்பட)

**காசோலை, வங்கி க/கு தொடர்புகளுக்கு :**

**A/C . No: 7601 - 408876 - 9**
**CHANCHIVE , VESTJYSK BANK ,**
**7500 HOLSTEBRO, DENMARK.**

**காசோலை அனுப்ப வேண்டிய முகவரி :**

**CHANCHIVE, DANMARKSGADE 10,**
**7500 HOLSTEBRO, DENMARK.**

**தபாலக பணக்கட்டளை க/கு இலக்கம்:**

**POST GIRO No: 3 65 35 28**

**"மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப் போனதொரு சுதந்திரமான கருத்துப் பரிமாறலை உருவாக்குவதற்கு எல்லோரது கருத்துக்களும் விமர்சனங்களுமே வழி வகுக்கும்"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்